ஞானசம்பந்தம்

மலர் 12] நந்தன௵ பங்குனி௴ 10—4—53 [இதழ் 5

ருவோத்தூரில்

—

குரும்பை
பாண்பனை
ன்குலை
ஓத்தூர்’’

- சம்பந்தர்.



உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 12] நந்தன௵ பங்குனி௴ 10—4—53. [இதழ் 5

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

தெய்வவிளக்கம் செந்தமிழால்

தெலுங்குமகள் தனிக்குடித்தனம் வைக்கப்போகின்றாள். தமிழ்த்தாயின் நிலபுலன்களில் ஒருபகுதியைப் பங்கிட்டுக் கொண்டு போகிறாள். வீடு, வாசல், பணம், பண்டம், ஆபீஸ் மேஜை, நாற்காலி, குப்பை, குப்பைக்கூடை எங்கெல்லாம் தெலுங்கு மணம் வீசுகிறதோ அவற்றையெல்லாம் பிரித்துக் கொண்டுபோகிறாள். அந்தச் சீமாட்டிக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்!

திருத்தணி முருகன் அன்றைக்கு அருணகிரிநாதர் திருப்புகழைக் கேட்டுக்கேட்டு மனம்பூரித்துப்போனவர். வேனில் வெப்பமுங்கூடத் தெரியாமல் செந்தமிழ்த் தென்றல்வீச சிறு குன்றின்மீது எழுந்தருளியிருக்கிறார். அந்தப் பழைய ஞாபகத்தை அவர்விட்டுப்போகாதபடி நமது திருப்புகழ்மணி பிர்மஸ்ரீ **டி. எம். கிருஷ்ணசாமி அய்யர்** அவர்கள் போன்ற அன்பர்கள் பல்லாயிரக்கணக்கான பக்தகோஷ்டிகளுடன் இன்றைக்கும் சென்று செந்தமிழ் அமுதத்தைப் பக்திப் பரவசத்துடன்

திருமுருகன் செவிவழியாக ஊட்டிவருகிறார்கள். இவற்றால் திருத்தணிகாசலநாதன் தனிப்பெருந் தகுதியோடு தமிழ்குடித்து உல்லாசமாக இருக்கிறார்.

திருத்தணிகை முருகனுடைய அப்பா காளத்திநாதரோ அம்மா ஞானப்பூங்கோதையோ, தமிழால் தெய்வநெறிவளர்த்த திருஞானசம்பந்தர் முதலான சமயாசாரியர்களின் தேவாரத் திருப்பாடல்களைக் கேட்டுக்கேட்டு அடங்காத ஆனந்தம் அடைகிறவர்கள்.

தமிழரசர்களாகிய சோழபாண்டிய பல்லவர்கள் அன்பின் எல்லையாகக்கட்டிய ஆலயம் அவர்கள் அரண்மனை. நக்கீரதேவர் பாடிய கைலைபாதி காளத்திபாதி அந்தாதியில் அலாதிப்பிரியம்.

இன்றைக்கும் இருபதாம்நூற்றாண்டு குருஞானசம்பந்தராகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளோ, இன்றைய நமச்சிவாயமூர்த்திகளாகிய சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகளோ, இன்றையகுமரகுருபரராகிய காசிவாசி சுவாமிகளோ அந்த அந்தாதியை அச்சிட்டும், ஓதியும், ஓதுவித்தும் வழிபடும்போது காளத்திநாதன் கனிந்த உள்ளத்தோடு செந்தமிழுக்கு உருகுகின்றார். அங்ஙனமே திருக்காரிகரைநாதரும் தமிழை விரும்புவர்.

இப்படித் தமிழையே உணவாக உட்கொள்ளும் பெருமானுக்குத் தமிழை விருந்தாக என்றைக்கோ காணும்நிலை வரும்போல இருக்கிறதே!

இத்தலம் இருக்கும் சித்தூர் ஜில்லாவைத் தெலுங்குநாட்டோடு சேர்த்துவிட்டால் சிவபெருமானும் செவ்வேளும் செந்தமிழை மருந்தாகக் காணும் நிலையல்லவா ஏற்பட்டுவிடும்? ஆதலால் உண்மைச் சமயிகள் "எங்களுக்குத் திருக்காளத்தி வேண்டும்; திருக்காரிகரைவேண்டும்; திருத்தணிகைவேண்டும்" என்று அரசியலாரிடம் முறையிட்டுக் கொள்ளவேண்டியது அவசியம் அல்லவா?

கம்பர் கவிச்சுவை.

[ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளத்திலெழுந்த இந்தஇலக்கியச் சுவை அன்பர்கட்கு விருந்தாகும்.]

தமிழ்ச் செய்யுள்கள் அமிழ்தினும் இனியனவாக மதிக்கப்படுகின்றன. எல்லாம் அவ்வாறில்லை. கம்பர்க்கு முன் வாழ்ந்த புலவர் பாக்கள் பழந்தமிழின்பம் விளைப்பன. பின் தோன்றிய புலவர் பாக்களுள் பல, ஒருவர் கருத்தை ஒருவர் கடன் வாங்கியனவாக இருக்கின்றன. கம்பர், "செவ்விய மதுரம்சேர்ந்த நற்பொருளில் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய கவிஞர்" என்று தாம் பாடியதற்குத் தாமே இலக்கியமாகி விளங்குகின்றார்.

'புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற்றாகி
அவிஅகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிஅளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்றொழுக்கமும் தழுவிச்சான்றோர்
கவிஎனக் கிடந்த கோதா விரியினை வீரர் கண்டார்'

என்று, சான்றோர் கவியின் இலக்கணம் கம்பரால் கூறப்பட்டிருக்கின்றது. அந்த இலக்கணமெல்லாம் கம்பர் கவியிலும் இருத்தலால் அவர் கவிகள் இலக்கியமெனத் தடையேயில்லை.

'தென்னுண்தேனின் தீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்'

என்று கவி உண்டாக்கும் இன்பத்தை உணர்த்தினார் கம்பர். அத்தகைய இன்பத்தைக் கம்பராமாயணத்தைக் கற்பவர் அடைவது உறுதி.

கவிப் பொருளாழத்தைப் பம்பை என்னும் பொய்கையின் ஆழத்திற்கு ஒப்பாக்கிக்,

'கவிஞர் நாட்டிய
சொற்பொருளாம் எனத் தோன்றல் சான்றது'

என்று பாடினார். இவ்வாழம் கம்பராமாயணத்தில் ஆழ்ந்து செல்வோர்க்கு நன்கு விளங்கும்.

"பல்லியல் உலகுறு பாடை பாடமைந்து
எல்லையில் நூற்கடல் ஏற நோக்கிய
நல்லியல் நவைஅறு கவிஞர் நாவரும்
சொல்எனத் தொலைவிலாத் தூணி தூக்கினான்"

என்பதில் கவிஞர் நாவிலிருந்து வரும் சொற்கள் ஓரளவுட்படாதவை என்று குறித்தார். அது கம்பர்க்கு மிக்க பொருத்தமாதலை அவரருளிய செய்யுட்களில் உள்ள சொற்செறிவாலும் கூறியது கூறுக்கொள்கையாலும் இனிது விளங்க உணரலாம்.

'நல்லியற் கவிஞர் நாவிற் பொருள்குறித் தமர்ந்த நாமச்
சொல்எனச், செய்யுட் கொண்ட தொடைஎனத் தொடையை நீக்கி

எல்லையில் செல்வம் தீரா இசைஎனப் பழுதி லாத
பல்அலங் காரப் பண்பே காகுத்தன் பகழி மாதோ'

என்று, கவிஞரது நல்லியலும் அவரது நாவின் சிறப்பும், அந்நாவினின்று வருஞ் சொற்களும், சொற்பொருள்களும், பொருள்பொதிந்த செய்யுள்களும், செய்யுளில் அமையுந் தொடை விகற்பங்களும், ஓசையின்பமும், அணிநயமும் உணர்த்தினார் கம்பர். அவைஎல்லாம் தம் செய்யுளில் அமைந்துள்ளன அல்ல ஆயின், அவர் கவிகளின் இயல் புணர்த்தும் இடங்களிலெல்லாம் ஒழுங்குறவும் முற்றுறவும் புலவர், பாவலர், நாவலர் பலரும் இசைவுறவும் இசைத்தல் இயலாதன்றோ? இத்துணையும் அறிந்தவற்றால், கம்பர் தம்வாக்கில் எழுந்த

'பொய்யில் கேள்விப் புலமையினோர் புகல்
தெய்வ மாக்கவி'

என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அவர் காலம் முதலியவை பற்றிய ஆராய்ச்சி பலரால் எழுதப்பட்டிருத்தலின் அவற்றில் நம் கருத்தைச் செலுத்திக் காலம் போக்காமல், அவர் பாடிய கவியின் இன்பத்தில் இயன்ற அளவு முயன்று பயனடைதல் இனிது.

கம்பர் கடவுள் வாழ்த்தில், முத்தொழிலையும் இடைவிடாத அளவிலா விளையாட்டாகச் செய்துவரும் முதல்வனையன்றி மற்றெவரையும் வணங்காத வீறுடையவர் என்பது,

'அன்னவர்க்கே சரண் நாங்களே'

என்றதால் விளங்கும்.

கம்பர் திருவடிப்பற்றல்லது மற்றுப் பற்றில்லாதவர் என்பது 'மெய்ந்நெறி நன்மையன் பாதமல்லது பற்றிலர்' என்ற குறிப்பால் அறியப்படுகின்றது.

கவிஞர்க்கு வேண்டும் அவையடக்கத்தைக் கம்பர்.

"நொய்தின் நொய்யசொல் நூற்கலுற்றேன் எனை
... மாக்கதைசெய்த செய்தவன் (வான்மீக முனிவர்)
சொல்நின்ற தேயத்தே"

என்று கூறினும், "முந்திய நாவினார் உரையின்படி நான் தமிழ்ப்பாவினால் இது உணர்த்திய பண்பு" என்றும் பித்தர், பேதையர், பத்தர் சொன்னவற்றைப்போலத் தம் சொல்லும் பன்னப்பெறுவன அல்ல, முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமக் கவிகளால் என்றும் 'இறையும் ஞானம் இலாத என் புன்கவி முறையின் நூல் உணர்ந்தாரும் முனிவரோ' என்றும் உணர்த்தியுள்ளார். இதனால், கல்விச் செருக்கு எள்ளளவும் இல்லாதவர் என்பது தெளிவாகின்றது. அளவுட்படாத ஞானமுடைய அவரே இறையும் (சிறிதும்) ஞானமில்லை என்று சொல்லுவாராயின், ஏனையோர்க்குச் சொல்லும் உண்டோ?

ஒன்று நிச்சயமாகச் சொல்ல நமக்குத் துணிவு உண்டு. கம்பர், தாம் இராமாயணத்தைத் தமிழில் பாடுவதால் உலகம் தம்மை இகழும் என்றும் தமக்கு அதனால் மாசு உண்டாகும் என்றும் தெரிந்துகொண்டாராம். தெரிந்திருந்தும் பொய்யில் புலவரது தெய்வச் செய்யுளின் சீர்த்தியைத் தெரிக்கப் பாடினாராம். அது,

"வையம் என்னை இகழவும் மாசு எனக்கு
எய்தவும் இது இயம்புவது யாது எனில்
பொய்யில் கேள்விப் புலமையினோர் புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே"

என்ற பாடலால் அறியப்படும். படினும், இராமாயணம் பாடியதால் கம்பர்க்கு இவ்வையத்தில் அளவிலாத புகழும் ஒரு மாசும் இல்லாத உயரிய தூய்மையும் உண்டாயின. ஆகவே, கம்பர், கருதியவாறு இகழ்ச்சியும் மாசும் எய்தினாரல்லர். புகழ்ச்சியும் தேசும் பொருந்தி இன்றும் விளங்குகின்றார் புலவர் உள்ளந்தோறும். இவ்வுண்மையை மறுக்க எவர்க்கும் துணிவிராது.

இராமாயணத்தின் முடிந்த முடிபானதொரு கொள்கை புண்ணியம் வெல்லும் பாவம் தோற்கும் என்பதாகும். இராமனது புண்ணியத்தை இராவணனது பாவம் வெல்லாமையால் இவ்வுண்மை வலியுறும். இதனைச் சீதை வாக்கில் வைத்து இராவணனுக்கு உணர்த்தும் இடத்தில்,

"வாளரி வள்ளல் தன்னால் இலங்கைமா நிருதர் எல்லாம்
கேளொடும் அழியும் ஆறும் வானவர் கிளரும் ஆறும்
நாளையே காண்டிர் அன்றே நவையிலிர் உணர்கிலீரோ
மீளருந் தருமந் தன்னை வெல்லுமோ பாவம் என்றாள்"

(சடாயு உயிர்நீத்த. 59)

என்றதால் நன்கறியலாம். இதன் நிமித்தமாகவே புண்ணியம் ஒரு கருத்திலும் பாவம் ஒரு கருத்திலும் நின்று கைகேயியின் கருணையை அவளது உள்ளத்தினின்றும் துரத்தின. அவை அவ்வாறு, துரத்துயதன் பயனே, இராம சரித விருத்தியாய் இராமாமிருதத்தைச் சகலலோகங்களும் உண்ணுதலாம்.

"அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல்அருள் துறந்தனள் தூய்மொழி மடமான்
இரக்கம் இன்மை அன்றோ இன்று இவ்வுலகங்கள் இராமன்
பரக்குந் தொல்புகழ் அமுதினைப் பருகுகின்றதுவே;

(மந்தரை, 78)

முத்து. சு. மா.

‘சொல்லின்செல்வர்’ திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள்

அடைக்கலம்

தருமபுர ஆதீனம் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு திருமுறைத் திருநாள் 5—6—52 அன்று நிகழ்த்திய பேருரையின் சுருக்கம்.

குருஞானமணியாய் வீற்றிருக்கும் மகாசந்நிதானமவர்கள் திருவடிகட்கும், தலைமைதாங்கும் பெரியார் அவர்கட்கும் இங்குள்ள தாய்மார்கள், தோழர்கள் அனைவருக்கும் என்னுடைய தாழ்மையான வணக்கம்!

திருவாசகம் என்னும் அருமையான பொருளைப்பற்றி இப்பொழுது அன்பர் விரிவுரைசெய்தார்கள். நம்முடைய நாட்டிலே திருவாசகத்திற்கு ஒரு தனிமதிப்பு உண்டு என்று காட்டினார்கள். சில பழமொழிகள் நம்முடைய நாட்டிலே தொன்றுதொட்டு வழங்கிவருகின்றன. நீதிநூல்களில் மிகச் சிறந்தன எவை என்று எல்லோரும் தெரிந்து கொள்வதற்கு ஒருவாசகம் நம்முடைய நாட்டில் வழங்கிவருகின்றது. அதுதான் ‘‘ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி’’ என்ற பழமொழி. ஆலும் வேலும் எப்படி பல்லுக்கு உறுதிசெய்கின்றனவோ அதனை நாம் எப்படிக் கண்கூடாகக் காண்கின்றோமோ அவ்வாறே நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதியாக இருக்கின்றன. நாலு என்பது நான்கு அடிகளுடைய நாலடியார்; இரண்டு என்பது இரண்டு அடிகளில் அமைந்த திருக்குறள். நாலடியாரையும், திருக்குறளையும் இந்த நாட்டிலுள்ளவர்கள் சொல்லுக்கு உறுதியாகக் கொள்ளவேண்டும் என்பது இந்தப் பழமொழியின் கருத்து.

இவ்வாறே நெஞ்சை உருக்குகிற உணர்ச்சியுள்ள சிறந்த நூல் எது என்பதைக் குறித்தும் பழமொழி வழங்குகிறது. அதை அன்பர் எடுத்துச்சொன்னார்கள். ‘‘திருவாசகத்திற்கு

உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்று அறுதியிட்டுக் கூறிவிட்டார். திருவாசகத்திற்கு ஒரு உள்ளம் உருகவில்லையானால் ஒருவாசகத்திற்கும் உருகாது. எனவே, கல்லைப் பிசைந்து கனியாக்கும் தன்மை திருவாசகத்திற்கு இருக்கிறது. அத்தகைய அரியநூலை அழகாக இங்கே விரித்துக்காட்டினார் நமது அன்பர் தத்துவப்பேராசிரியர் C. இராமலிங்கம் அவர்கள். அதன் தொடர்புள்ள பொருளைப்பற்றிப் பேசவேண்டும் என்று மகாசந்நிதானம் அவர்கள் எனக்குப் பணித்து விட்டார்கள்.

அடைக்கலம் என்பது திருவாசகத்தில் அருளிச்செய்யப்பட்ட ஒருபகுதி. ஆண்டவனருளைப் பெறுவதற்குத் திருவாசகம் அருமையான நெறியைக்காட்டுகிறது. அதுதான் அடைக்கலம் என்ற நெறி அது அருமையான நல்ல தமிழ்ச்சொல். சரணாகதி என்பது வடசொல். சரணாகதி என்றாலும் அடைக்கலம் என்றாலும் பொருள் ஒன்றே. அந்தமுறையிலே அடைக்கலத்தின் பெருமையைத் திருநெறித் தமிழ் நன்றாக எடுத்துரைக்கின்றது தமிழிலுள்ள காவியங்கள் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன. இவற்றைக் கால அளவுக்கேற்பவும், உங்களுடைய பொறுமைக்கு ஏற்பவும், இங்கு நடைபெற வேண்டிய பிற நிகழ்ச்சிகளுக்கேற்பவும் சுருக்கமாகச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமையாகும்.

நேற்றுமின்றும் திருநெறித்தமிழ் உங்கள் செவிகளிலே ஏறியுள்ளது. திருநெறி என்பது சிவநெறி. நாம் சென்று அடையவேண்டிய நெறியை அறிவிக்கின்ற நெறி. அந்த நெறியைத் தேவாரத்தில் காணலாம்; திருவாசகத்தில் காணலாம்; காவியங்களிலே காணலாம். திருவாசகம் ஒரு அருமையான பாசுரம் அருளிச் செய்கிறது. அடைக்கலத்தில் மாணிக்கவாசகர் தன்னை அடைக்கலப்பொருளாக ஆண்டவனிடம் ஒப்புவிக்கிறார். அதனை மக்களுக்கும் அறிவிக்கிறார். ஒருபாட்டு நினைவுக்கு வருகிறது.

"வெறுப்பனவே செய்யும் என் சிறுமையை நின் பெருமையினால்
பொறுப்பவனே அராப் பூண்பவனே பொங்குகங்கை சடைச்
செறுப்பவனே நின் திருவருளால் என்பிறவியை வேர்
அறுப்பவனே உடையாய் அடியேன் உன் **அடைக்கலமே.**"

தன்னுடைய தொல்லையாலும் ஆண்டவனுடைய பெருமையை உலகத்தார்க்கு எடுத்துக்காட்டி அடைக்கலநெறியின் பெருமையை அறிவிக்கிறார் மணிவாசகர். நான்வெறுப்பனவே செய்கின்றவன்தான். என் சிறுமையை எல்லாம் ஆண்டவனே! உன்பெருமையினாலே பொறுத்து என் பிறவியின் வேரறுத்துவிடவேண்டும். இத்தகைய பெரிய உதவியை அடியேனுக்குச் செய்யவேண்டும் என்று; அவர் சொல்லுகிறார். அந்த நெறிதான் தேவாரத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது. அடியேன் நின் அடைக்கலம்; என்னை நீ அடைக்கலமாக ஏற்றுக்கொள்ளவேண்டும்; அடியேன் நின் திருவடிகளிலே அடைக்கலம் புகுந்தேன் என்று சுந்தரர் பாடியிருக்கிற தேவாரம் இப்பொழுது உங்கள் நினைவுக்குவரும். உன்னுடைய திருவடிகளிலே என்னை ஏற்றுக்கொள்ள வேண்டும்; உன் திருவடியடைந்தேன்; அன்றுகூட அப்படித்தான் உன்னை அடைக்கலமாக அடைந்த தொண்டனுக்காக நீ இயமனைக் காலால் உதைத்து உருட்டினாய்; அந்தக் கருணையை அடியேனிடத்திலும் காட்டவேண்டும் என்று சொல்லுகிறார் அவர்.

"அந்தணாளன் உன் **அடைக்கலம்** புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்தகாலன்தன் ஆருயிரதனை
வவ்வினாய்க்கு உன்றன் வண்மைகண்டடியேன்
எந்தை நீயெனை நமன்றமர் நலியின்
இவன் மற்றுஎன் அடியானென விலக்குஞ்
சிந்தையால் வந்துஉன் திருவடியடைந்தேன்
செழும்பொழில் திருப்புன்கூருளானே."

அடைக்கலம் என்ற நெறி எத்தகையது? எப்படிப்பட்டவர் அடைக்கலம்புகுந்தவர் என்று சொல்லப்படுபவர்? மாணிக்கவாசகர் அந்தநெறியை எப்படிப் பாடுகிறார்? எப்பொழுதுபாடுகிறார்? என்று பார்ப்போம்.

மாணிக்கவாசகர் முதலமைச்சர்; பாண்டி நாட்டிலே பணிசெய்தவர் என்பது உங்களுக்குத் தெரியும். சிறந்த அறிஞர். அவர் குருந்தமரத்தடியில் ஆண்டவன் காட்சிதந்த காலம்முதல் அந்த ஆண்டவனிடத்திலே தன்னை ஒப்புவித்து விட்டார். அமைச்சராக இருக்கும்பொழுது மன்னன் பரிகள் வாங்கப் பொருள்கொடுத்து அனுப்பினான். அரசன் பொருளென்றும் தன்பொருள் என்றும் வேற்றுமையில்லாமல் பரிகள் வாங்கக் கொடுத்த அந்தப் பணத்தைக்கொண்டு ஆண்டவனுக்கு ஆலயம் அமைத்துவிட்டார். இதனை அறிந்த அரசன் பரிகள் வாங்கக்கொடுத்த பணத்தை நீ கல்லிலும் மண்ணிலும் செலவிடலாமா என்றுகேட்டான். அப்படி அவர் செய்துவிட்டதற்காகச் சிறையில் அடைத்தான். அவர் அந்தச் சிறையிலிருந்து பாடிய பாட்டுத்தான் இந்தப்பகுதி என்று எண்ணுகிறேன். என்னுடைய உடலை மன்னன் சிறையிலே அடைத்தான்; எனக்கு இன்பமும் துன்பமும் உண்டு; ஆண்டவனே! என்னை என்று நீ ஆட்கொண்டாயோ அன்றே உனக்கு நான் அடைக்கலப் பொருளாகிவிட்டேன்.

“அன்றே என்றன் ஆவியும்
    உடலும் உடைமை யெல்லாமும்
குன்றே யனையாய் என்னையாட்
    கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூறு எனக்குண்டோ
    எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
    நானோ இதற்கு நாயகமே.”

என்று பாடிய பாட்டு சிறையிலிருந்து பாடியபாட்டாக இருக்கலாம் என்று அடியேன் எண்ணுகிறேன். இதுதான் அடைக்கலத்தின் இலக்கணம். நான் எனது என்னும் செருக்கற்று ஆண்டவன் திருவடியிலே உடல் பொருள் ஆவி மூன்றையும் ஒப்புவிக்கின்ற பெருமை அடைக்கலத்துக்கு உண்டு. அடைக்கலம் புகுந்தவரை ஆதரிப்பது பெருமை சான்ற இறைவனின் கடமையாகச் சொல்லப்படுகின்றது. அபயம் என்று உண்மையாக வருகிறவனுக்கு ஒருவன் அபயதானம் அளியாதிருத்தல் தவறு என்று தமிழ் நூல்கள்

கூறுகின்றன. 'அஞ்சேலென்று அருள்செய்வான் அமரும் கோயில்' என்று திருவையாற்றுப்பதிகம் குறிக்கிறது. தமிழும் சைவமும் கலந்து விருந்தளிக்கின்ற அருமையான பாட்டு அது.

"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டு ஐம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்று
அருள்செய்வான் அமருங்கோவில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்று அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில்பார்க்கும் திருவையாறே."

ஐந்து பொறிகளும் கலங்கி அறிவழிகிற நிலையில் அஞ்சாதே என்று அபயம் தந்து அருள் செய்கின்ற- மருத்துவருக்கெல்லாந் தலைவராக வைத்தீஸ்வரனாக விளங்குகின்ற எம்பெருமான் எங்கேயிருக்கின்றான் திருவையாற்றிலே யிருக்கின்றான் என்று தேவாரம் கூறுகிறது. அவனைத்தவிர வேறு யாரால் அபயம் அளிக்க முடியும்?

"குற்றாலத்துறை கூத்தன் அல்லால் நமக்கு
உற்றார் யார் உளரோ"

என்று அப்பர் பாடினார் அல்லவா? எல்லாம் நன்றாய் இருக்கிற காலத்தில் - நாமே செயல்புரிகின்றோம் என்றகாலத்தில் அவனை மறந்திருத்தல் கூடும். ஆனால் புலனைந்தும் பொறி கலங்கி, யறிவழிந்திட்டு ஐம்மேலுந்தி என்ற இந்த நிலையில் சிந்தையெல்லாம் ஆண்டவனுடைய திருவடியிலே சேர வேண்டும் என்று அப்பொழுது கதறுகிறார் பக்தர்.

இத்தனைநாள் நம்மை மறந்திருந்தானே என்பதற்காக ஆண்டவன் கைவிட்டுவிடவில்லையாம். இன்றாவது இவனுக்கு இந்த எண்ணம் வந்ததே என்று மகிழ்ந்து அஞ்சேல் என்று அருள்செய்வான் என்பதுதான் அந்தத்தேவாரத்தின் கருத்து. ஆகவே அடைக்கலமென்று முற்றும் ஒப்புவித்துவிடவேண்டுமென்பதன்றோ திருவாசகத்தின் கருத்து? திருநெறித்தமிழ்

அடைக்கலத்தின் பெருமையை எவ்வாறு விளக்குகின்றது என்பதை ஒருசிறிது காட்டவேண்டும்.

இந்த அடைக்கலம் வைணவர்கள் போற்றுகின்ற திருப்பாசுரத்திலும் அமைந்திருக்கின்றன. கிறித்தவர்கள் குறிப்பிடுகின்ற நூலிலும் அமைந்திருக்கின்றன. வைணவர்கள் மிகப்போற்றுகின்ற குலசேகர ஆழ்வார் திருப்பாடல் ஞாபகத்திற்கு வருகின்றது. உருகி உருகிப் பாடுகின்ற தன்மையால் குலசேகர ஆழ்வாருக்கு நிகரில்லை என்று கருதுகிற வைணவ அன்பர்கள் இருக்கிறார்கள். ஆழ்வார் சொல்கிறார்;

“ அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தேயழும் குழவி யதுபோன் றிருந்தேனே ”

எல்லோரும் படித்துப் பயன்பெறவேண்டிய பதிகம் இது. ஒரு தாய், தன் பிள்ளையிடத்தில் சீற்றங்கொண்டு தள்ளுவாளானால் அந்தச்சேய் எங்கேபோகும்? தள்ளினாலும் மீண்டும் மீண்டும் தாய்மடியிலேதானே வந்துவிழும். அதுதானே சேயினுடைய தன்மை. ஆகவே நீ என்தாய், நீ ஈன்ற சேய்தான் நான், நீ என்னைத் தள்ளினால் நான் எங்கேபோவேன்?

“ தருதுயரம் தடாயேல் உன்சரணல்லால் சரண் இல்லை
விரைகுழுவும் மலர்ப்பொழில்சூழ் விற்றுவக்கோட் டம்மானே ”

நீ என்னைத் தள்ளிவிட்டால் அடைக்கலம் தருவார் யாரும் இல்லை; எனக்கு வேறு புகலிடம் இல்லை.

திருப்புகலூர் என்பதற்கு ஆன்மாக்களுக்குப் புகல்தருகின்ற இடம் என்பது பொருள். அடைக்கலம் தருகின்ற ஊர் என்றாலும், சரணாகதி அளிக்கின்ற ஊர் என்றாலும், புகலூர் என்றாலும் ஒன்றேதான். நீ தள்ளினால் நான் எங்கே போவேன்? உன்னையே அடைக்கலமாக அடைந்தேன் என்று முறையிடுகிறார் ஆழ்வார். அவனுடைய அடைக்கலப்பொருள் நாம் என்று அறிந்துகொள்ளவேண்டும். திருவெம்பாவையையும், திருப்பாவையையும் ஒன்றாகவைத்து உணரவேண்டும் என்ற இந்தக்காலத்திலே இதை நினைவூட்டுவது மிகமிகப் பொருத்தமாகும்.

"உன்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலமென்
றங்கப்பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்"

என்பது திருவெம்பாவை. யான் உனக்கே அடைக்கலம். கைப்பிள்ளைக்கு வேறுகதி ஏது? அடைக்கலம் தாய். அந்தக் கருத்தைத்தான் பாடுகிறார் மாணிக்கவாசகர்.

ஆழ்வார் கருத்தும், மாணிக்கவாசகர் கருத்தும் ஒன்றுபட்டிருப்பது நாம் கண்டு களிக்கவேண்டுவதல்லவா? இத்தகைய அடைக்கலம் கிறித்தவநெறியிலும் இருக்கின்றது. இன்று நம்மவர்களில் அடைக்கலம்பிள்ளை என்ற பெயருள்ளவர்கள் இருக்கிறார்கள். ஆனால், கிறித்தவ அன்பர்களில் அடைக்கலம்பிள்ளை என்ற பெயருடையவர்கள் பலர் சென்னையிலிருக்கிறார்கள். அவர்கள் அடைக்கலத்தை நம்பியவர்கள். அடைக்கலத்தை நாம் ஏட்டில் பார்த்தோம். இப்பொழுது பெயரில் பார்க்கின்றோம். அடைக்கலத்தின் பொருளை அறிவாரோ இல்லையோ ஆனால் அடைக்கலம்பிள்ளையாக இருக்கிறார் அவர். எவ்வளவு தீங்கு அவர் செய்தாலும் ஆண்டவனின் பெயரால் அதைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

வீரமாமுனிவர் ஒரு கிறித்தவக்கோயில் கட்டினார். வீரமாமுனிவரைப்பற்றி நான் இங்கு விரித்துப்பேசவேண்டியதில்லை. இத்தாலியதேசத்தில் பிறந்தவர். நம்முடைய தமிழ் நாட்டிற்குவந்து தமிழ்ப்பணி செய்தவர். தேம்பாவணி என்னும் காவியத்தை ஆக்கியவர். அவர் ஒரு சிறந்த அறிஞர். பிறநாட்டிலே பிறந்து நம்முடைய தமிழ்நாடுசெய்த தவத்தால் இங்குவந்து தமிழ்ப்பணி செய்தவர். அவர் கொள்ளிடநதி ஓரத்திலே கோயில் எடுத்தார். அது மாதாகோயில். அதற்கு அடைக்கலமாதா என்று பெயர்கொடுத்தார். அடைக்கலம் தருகிற மாதா. அபயம் என்று வந்தடைந்தால் அடைக்கலம் தருகின்ற பெருமைசான்ற மாதா அந்தத் திருக்கோயிலிலே அடைந்திருக்கின்றார் என்று காட்டினார். அதற்குத் திருக்கோயிலூர் என்று பெயரிட்டார். அங்கே சென்றால் அந்த மாதாவின் அருள் ஆன்மாக்களைக் காக்கும் என்ற கருத்தில் அந்தப்பெயரிட்டார். ஆகையால் அடைக்கலம் கிறித்தவர்களாலும் போற்றப்படுகின்ற சிறந்த நெறி.

இதைக் காவியம் எப்படிக் காட்டுகிறது என்பதையும் சொல்லுகிறேன். கம்பனுடைய காவியத்தில் அடைக்கலம் எப்படிப் போற்றப்படுகின்றது? கம்ப இராமாயணத்தில் நீங்கள் அறிந்த ஒன்றைச் சொல்லப்போவதில்லை. தெரிந்ததைச் சொல்லுவது மிகையாகும். மாணவர்கள் அறியாத அடைக்கலநெறியைப் பேசவேண்டும் என்பது ஆசை.

இராமாயணத்தைச் சரணாகதி சாத்திரம் என்று சொல்லுகிறமுறை வைணவத்திலுண்டு. இன்னும் பலவகையாக இராமாயணத்தைப் போற்றுவதுமுண்டு. சீதையின் கற்பின் பெருமையைக்காட்டும்நூல் அது. அடைக்கலத்தின் பெருமையை உணர்த்துகின்ற சிறந்தகதை என்ற கருத்தில் சரணாகதிசாத்திரம் என்று சொல்வார்கள். சரணாகதிசாத்திரம்என்ற பெயருக்கு அது எப்படிப்பொருத்தமுடையது?

இராமன் வீட்டைவிட்டுக் காட்டிற்குச் செல்லுகின்றான். அப்பொழுது முதலில் அவன் அளித்தது அபயதானம்தான். வேறுதானம் அளிப்பதற்கு இயலாததால் அபயதானம்தான் அளித்தான்; அடைக்கலம் அளித்தான். அபயம் என்று வந்தடைந்தவருக்கு "அஞ்சேல்" என்று சொல்லுவதுதான் அபயதானம். என்ன அபயம் முதலில் இராமன் கொடுத்தான் என்று பார்ப்போமானால், மக்கள் காட்டிலேவந்து முறையிட்டார்கள். பெரியோர்கள் வந்தார்கள்; வயோதிகர்கள் வந்தார்கள். "எங்களுடைய முறைப்படி நாங்கள் வாழ்க்கை நடத்த இயலாதவர்களாக இருக்கிறோம்; நீங்களோ வில்லும் கையுமாக இங்கே வந்திருக்கின்றீர்கள்; அரக்கரை எல்லாம் அழித்து, நல்லாரைக்காப்பது அரசராகிய தங்கள் கடன்" என்று முறையிட்டார்கள். யார் அந்த அரக்கர்கள் என்று இராமர் கேட்டார். அதற்கு,

"இரக்கம் என்று ஒருபொருள் இலாத நெஞ்சினர்
அரக்கர் என்று உளர்சிலர் அறத்தின் நீங்கினார்
நெருக்கவும் யாம் பலர் நெறியலா நெறி
துரக்கவும் அருந்தவத்துறையுள் நீங்கினேம்."

அரக்கர்செய்கிற கொடுமையினால் நாங்கள் வாழ்வதற்கு இயலாதிருக்கின்றோம்; எங்களைக் காப்பாற்றவேண்டும் என்று முறையிட்டார்கள். பொருளல்லவரிடத்தில் இருக்கவேண்டிய

பொருள் இரக்கமென்றபொருள். இரக்கமில்லா நெஞ்சினர், அரக்கர் என்ற பெயரோடு உலகத்தில் வாழ்கின்றார்கள். அரக்கர்கள் ஒருகாலத்தில்தான் இருந்தார்கள்; இப்பொழுது இல்லை என்று எண்ணாதீர்கள். இராமாயணகாலத்தில்தான் இருந்தார்கள்; இராமபாணத்தினால் அழிந்துவிட்டார்கள் என்று கருதுவதற்கு இடமில்லை. ஆகவே, முதலில் இராமர் அளித்ததானம் அபயதானம் அந்த அரக்கரைக் கொன்று நல்லாரை வாழச்செய்தார். அது அரசருடைய நெறியல்லவா? நாட்டிலிருந்தாலும், காட்டிலிருந்தாலும் நல்லாரைக் காக்கவேண்டியது அரசருடைய கடமை. ஆகவே, தீயாரை அழிப்பதும், நல்லாரைக் காப்பதும் இறைவனுடைய செயல். அரசனுக்கும் இறைவன் என்ற பெயர் உண்டு. ஆண்டவனுக்கும் அந்தப்பெயர் உண்டு. இந்த உண்மையைக் கருதித்தான் இப்படி அமைத்தார்களோ என்று எண்ணவேண்டியதாக இருக்கிறது. ஆண்டவனிருக்கும் இடத்திற்கும் கோயில் என்று பெயர். அரசன் இருக்குமிடத்திற்கும் கோயில் என்று பெயர்.

" இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின் "

என்பது திருக்குறள் அல்லவா? இறை என்று சொல்லப்படுகின்ற அரசன் இந்த உலகத்தையெல்லாம் காக்கின்றான். அவனை எது காக்கின்றதென்றால் நீதிமுறை காக்கின்றது. முறையோடு காக்கின்றவனுக்குக் கேடு இல்லை. அவனை ஆண்டவன் அருள் காக்கின்றது. நீதியென்பது ஆண்டவனுடைய வடிவம். அந்த நீதியைப் பரிபாலனம்செய்கின்ற அரசன் கெட்டொழியமாட்டான் என்று திருக்குறள் சொல்கிறது. நாட்டிலிருந்தாலும், காட்டிலிருந்தாலும் நல்லாரைக் காக்கும் பொறுப்பு அரசர்க்கு உள்ளது. ஆண்டவனுக்கும் உள்ளது. ஆண்டவன் எங்கேயிருக்கிறான் என்றால் எங்கே நீதி உள்ளதோ; எங்கே துன்பமற்றவர்கள் இருக்கிறார்களோ அங்கே இருக்கின்றான். செல்வர்பால் ஆண்டவனிருக்கிறான் என்று எந்தப்பாசுரமும் பாடவில்லை. ஆண்டவன் ஏழை பங்காளன்; ஏழைகளுக்கு உடனிருந்து உதவிசெய்பவன். ஆகவே, ஏழைகளென்று யாரையும் இகழுதல் கூடாது.

“ இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு ”

என்று உலகநிலையைக்கொண்டு ஒப்பிடுகிறார் திருவள்ளுவர். எவன் செல்வரைச் சிறப்புசெய்கின்றாரோ அவன், அவனிடத்துள்ள சிறுமையை உணராதவன் என்கிறார் திருவள்ளுவர்.

“ இல்லானை இல்லாளும் வேண்டாள் மற்று
ஈன்றெடுத்த தாய் வேண்டாள்
செல்லாது அவன் வாயிற்சொல் ”

வீட்டிலும் அவன்சொல்லுக்கு மதிப்பேது? நாட்டிலும் அவன்சொல்லுக்கு மதிப்பேது? இல்லான் என்ற சொல் நமக்கு எதை உணர்த்துகிறது? குணம் இல்லாதவனுக்கு அந்தச்சொல் சேரலாகாதா? இல்லானென்பது பொருள் இல்லாதவனைத்தான் குறிக்கின்றதோ? இல்லான் என்பதற்கு என்னபொருள்? இல்லான் என்பதற்குப் பொருள் இல்லாதவன் என்று கொள்ள முடியுமா? கணவன்–இல்லான். அவன் பொருளீட்டச்செல்லவேண்டும். இல்லாள் வீட்டிலுள்ள அம்மை; அம்மையார் தன்கடமையைச் செய்ய வேண்டும். ஆத்துக்காரர் என்பதெல்லாம் இந்தக்காலத்து முறை. ஆத்துக்காரர் ஆத்தோடவே இருக்கட்டும். அதைப் பற்றி நமக்குக் கவலைவேண்டாம் ஆனால், அது தமிழ்ச்சொல் அல்ல. இதெல்லாம் இந்தக்காலத்து முறை. தமிழிலே இத்தகைய வழக்கெல்லாம் இல்லை. ஆத்துக்காரரைக் காணவே முடியாது. மனையாள் என்றிருக்கின்றது, இல்லாள் என்று இருக்கின்றது. மனையாளுக்கு மனையை ஆள்பவர் என்று பொருள்கொண்டிருக்கிறார்கள். ஏதோ பெண்ணைக் கொடுமை செய்கிறோமென்று பேசுகிறார்களே அவர்களிடத்திலே இதை எடுத்துக்காட்டுங்கள். மனையாள் – வீட்டுக்குரியவள். நம்முடைய பண்பாட்டைக் காட்டுவதற்கு இந்தச் சொற்களே போதும். இதற்கு நிகரான ஆண்பால் இல்லையென்றபொழுது நாமெல்லாம் வெளியில்நிற்கவேண்டுமென்று தெரியவில்லையா?

அரசனுடைய தன்மை நாட்டைக் காக்கவேண்டும். முதலிலே அபயதானம் கானகத்திலே இராமர் கொடுத்தார். இரண்டாவதாகச் சுக்கிரீவனுக்குக்கொடுத்த அபயம். (வரும்)

“மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே”

வித்துவான் T. S. தேவசேனாபதி தேசிகர், வேலூர்.

உடலின் உள்ளே உயிர் என்றபொருள் உண்டு என்பதனை உணர்ந்த மனிதன் அவ்வுயிர் உடலின் உள்ளே எவ்வாறு வந்து சேர்ந்தது என்பதனை ஆராயத் தொடங்கினான். உடலே உயிரைத்தேடிப்பிடித்துவந்து தன்னுள் அமைத்துக்கொண்டதா என்பதனை நோக்கினால் உடல் சடம், அது ஒரு வேலையையும் செய்ய இயலாது, ஆதலின் அது உயிரைக் கொண்டுவந்திருக்க முடியாது. அங்ஙனமாயின் உயிரே உடலைக் கொண்டுவந்ததா என்றால் அதுவும் நிகழமுடியாது. சிற்றறிவும் சிறுதொழிலும் உடையது உயிர். சுதந்திரமற்றது. உயிர்களைநோக்கி உங்கள் விருப்பம்போல் ஓர் உடலை எடுத்துக் கொள்ளுங்கள் என்று விட்டிருந்தால் எல்லா உயிர்களும் மன்மத வடிவமாக உலகில் வந்து பிறந்திருக்கும். ஒருவன் உயரமாகவும், ஒருவன் குள்ளனாகவும், ஒருவன் முடவனாகவும், ஒருவன் குருடனாகவும். ஒருவன் கருப்பனாகவும் பார்க்கவே ஒண்ணா. விகார உருவத்தை உடையவனாகவும் உலகில் வந்து பிறந்திருக்கமாட்டான். இதனால் உயிரும் உடலைக் கொண்டுவரவில்லை என்பது விளங்குகிறது. உடலும் உயிரைக் கொண்டுவரவில்லை. உயிரும் உடலைத் தேடிக்கொண்டு வரவில்லை. ஆயின் இவை எவ்வாறு ஒன்றுசேர்ந்தன? இறைவன் அருளியிருப்பன் என்பர் சிலர்; அதுவும் இல்லை. இறைவனும் தன்விருப்பம்போல் இவ்வுடலை நமக்கு அளிக்கவில்லை. அங்ஙனம் அளித்திருந்தால் ஒருவன் செல்வத்தில் சிறந்தவனாகவும், மற்றொருவன் மிக்க ஏழையாகவும், ஒருவன் நோயாளியாகவும், மற்றவன் செம்மையான உடலை உடையவனாகவும், ஒருவன் மாடிவீட்டில் வாழ்பவனாகவும், இன்னொருவன் குடிசையில் வதிபவனாகவும், ஒருவன் துன்புறுதலும் ஒருவன் இன்புறுதலும் ஆகிய வேறுபாடுகள் தோன்றா. அங்ஙனம் தோன்றுமானால் இறைவன் நடுநிலைக்கு ஓர் இழுக்குநேரிடும். அப்படியானால் இவ்வுடல் நமக்கு எவ்வாறு கிடைத்தது? ஆராய்ந்தால் அவர் அவர் செய்யும் நல்வினை தீவினைக்கு ஏற்ப உடலை இறைவன் நமக்கு அருளுகின்றான். உலகில் மக்களுடைய வேறுபாடுகளுக்

கெல்லாம் அவர் அவர்களுடைய வினையேகாரணம். ஒருவன் இன்பமாக வாழ்கின்றான் என்றால் அவன் நல்வினைப்பயனே காரணமாகும். ஒருவன் துன்புற்று வருந்துகிறான் என்றால் அவனுடைய தீனைப்பயனே காரணமாகும். அங்ஙனமாயின் ஒரு குழந்தை பிறக்கின்றது. பிறந்து மூன்று நாட்கள்தான் ஆகின்றன. அது படும் துன்பமோ சொல்ல ஒண்ணாது. அந்த மூன்று நாட்களில் அக்குழந்தை செய்துவிட்ட தீமை என்ன? அது ஏன் துன்புற்று வருந்துகின்றது? அதற்குத் துன்பம் எவ்வாறு வந்தது? என்று ஒருவர் கேட்கலாம். உண்மையான கேள்வி. அந்த மூன்று நாட்களில் அக்குழந்தை யாதொரு தீவினையும் செய்திருக்க முடியாது. எனவே அக்குழந்தை துன்புற்று வருந்துவதற்குக் காரணம் முன்பிறவியில் அக்குழந்தை செய்த தீவினையே ஆம். இதனால் முற்பிறவியில் செய்தவினை அடுத்த பிறவியில் வந்து தாக்கும் என்பது தெளிவாகும், நான் ஒரு தவறும் செய்யவில்லை ஆனால் தண்டனை அடைந்தேன் எனச் சிறையில் உள்ளவன் கூறுதலையும் நான் யாருக்கும் தீங்கு விளைத்தேனில்லை ஆயினும் துன்புற்று வருந்துகின்றேன் என உலகில் கூறப்படுதலையும் அறிந்திருக்கிறோம். இவ்வாறு இப்பிறவியில் தீவினை செய்யாதிருந்தும் துன்புற்று வருந்தக் காரணம் முன் பிறவியின் வினையே.

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை நோக்குங்கள். கோவலனைவிடத் தூய உள்ளம் உடையவன் உலகில் உளரோ? அப்பிறவியில் அவன்செய்த அறங்கள் பல. இருந்தும் பாண்டியன் நெடுஞ்செழியனால் கள்வன் என்று கொல்லப்பட்டான் அன்றோ. அவன் முன்பிறவியில் செய்த தீவினையாலன்றோ கொல்லப்பட்டான். முற்றும்துறந்த பட்டினத்தடிகளை நோக்குவோம். ''பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆரும் துறத்தல் அரிதுஅரிது'' என்று தாயுமானாரால் போற்றப் பெற்றவர்.

நகரங்களில் தங்கி இருந்தால் மக்கள் தொந்தரவு பொறுக்க முடியாமல் இருக்கிறது என்று எண்ணிக் கானகம் அடைந்தார். அங்கு ஒரு பிள்ளையார் கோயில். ஒருவரும் அறியாமல் பிள்ளையாரின் பின் இருந்து யோகத்தில் அமர்ந்தார். அந்நாடு ஆளும் பத்திரகிரி மன்னன் அரண்மனையில் கள்வர் களவு செய்தனர். களவு செம்மையாக வாய்க்கவே பிள்ளையாருக்கும் ஒரு முத்து

மாலையை வீசியெறிந்துவிட்டு ஓடினர். அம்மாலை பிள்ளையார் கழுத்தில் விழாமல் அருகில் இருந்த அடிகள் கழுத்தில் விழுந்து விட்டது. அரசகாவலர் கள்வரைத் தேடிவந்தனர். அடிகள் கழுத்தில் அரசன் முத்துமாலை இருப்பதனைக் கண்டார்கள். அடிகளைக் கள்வன் என்றெண்ணி அரசனிடம் அழைத்துச் சென்றனர். அரசன் அடிகளைநோக்கி "முத்துமாலை எவ்வாறு கிடைத்தது" என்று வினவினான். "அதுபற்றியே சிந்திக்கின்றேன்" என்றார் அடிகள். அடிகளைக் கழுவில் ஏற்றுமாறு அரசன் ஆணையிட்டான், கழுமரத்தை நோக்கினார் அடிகள்,

என்செய லாவது யாதொன்று மில்லை இனித்தெய்வமே
உன்செயலே என்று உணரப்பெற்றேன் இந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்றுமில்லை இனிப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை இங்ஙனே வந்து மூண்டதுவே.

என்ற பாடலை இசைத்தார்கள்.

இப்பிறவியில் அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்குக் காரணம் முன்பிறவியின் வினை என்பதும், உயிர்கள் செய்யும் வினைகளை அனுபவிக்குமாறு செய்கின்றவன் இறைவன் என்பதும் இப்பாடலில் இருந்து நமக்கு விளங்குகிறது. முன்பிறவியில் செய்தவினை இப்பிறவியில் வந்து தாக்கும் என்பதும் இப்பிறவியில் செய்யும் வினை மறுபிறவியை உண்டாக்கித் துன்பத்தையும் ஊட்டுகின்றது என்பதும் மக்கள் நன்றாகத் தெரிந்திருந்தாலும் மேலும் மேலும் அவ்வினைகளையே செய்து கொண்டிருக்கிறார்கள். காரணம் என்ன? உயிர்களை அநாதியாகவே பற்றியுள்ள ஆணவமலமே இதற்குக் காரணமாகும். இதற்கு மூலமலம் என்றும் வேறொரு பெயர் உண்டு. செம்பில் களிம்புபோல் இந்த ஆணவமலம் உயிரைப்பற்றியுள்ளது. செம்பானது தானாகவே களிம்பைப் போக்கிக்கொள்ளும் ஆற்றலுடையது அன்று. களிம்பும் செம்பைவிட்டுத் தானாக நீங்கிப் போகும் ஆற்றலும் உடையதன்று. செம்பிலிருந்து களிம்பைப் போக்க மருந்தும் அம்மருந்து வகையினை அறிந்து செய்யும் மருத்துவன் ஒருவனும் வேண்டும். அதுபோன்றே ஆணவமலமும் உயிரைவிட்டுத் தானே நீங்கும் ஆற்றல் உடையது அன்று. உயிரும் அந்த ஆணவமலத்தைத் தானே போக்கிக் கொள்ளும் திறம் உடையதும் இன்று. எனவே மருந்து வகை

களில் வல்லவன் ஒருவன் செம்பில் உள்ள களிம்பைப் போக்குதல்போல உயிரைப்பற்றியுள்ள ஆணவமலத்தைப் போக்க இறைவன் ஒருவன் வேண்டும் என்பது பெறப்படுகின்றது. அழுக்கேறிய துணியை எடுத்துக்கொள்வோம். துணி அழுக்கைத் தானாகப் போக்கிக்கொள்ள முடியாது. அழுக்கும் துணியை விட்டுத் தானாகநீங்காது. அழுக்கைப்போக்க வண்ணான் ஒருவன் வேண்டும். வண்ணான் துணியில் உள்ள அழுக்கைப்போக்க உவர்மண், சவர்க்காரம் முதலிய மேலும் இரு அழுக்குகளைத் துணியுடன் சேர்க்கின்றான். அதுபோல உயிரினிடம் அமைந்துள்ள ஆணமல அழுக்கைப்போக்க மாயை கன்மம் என்ற இரு அழுக்குகளை இறைவனாகிய வண்ணான் உயிருக்கு அருளுகின்றான். இவ்விரு அழுக்குகளைப்பெற்ற உயிர் ஆணவமலம் நீங்கப்பெற்று இறையோடு இரண்டறக் கலக்கின்றது. இவ்வித ஆராய்ச்சியினால் இறைவன் ஒருவன் உண்டு என்பது உ.ள்ளங்கை நெல்லிக்கனி போன்று விளங்குகிறது,

(தொடரும்)

கடிதம்.

Shrimathi M. CHANDRASEKAR.

Deputy Minister for Health, India, New Delhi.
14th March, 1953

Your Holiness,

I am indeed very grateful to your Holiness for sending the Adhinam's publications at the instance of shri Thirukkural V. Muniswamy, M. P. I have been evincing keen interest in Saiva Siddhantha and the receipt of these invaluable publications has only increased my interest in the study of the works of our great authors. I really appreciate the laudable work that is being done by the Adhinam. I am, however, confident that the Adhinam will spare no pains to continue its efforts to further popularise our ancient literature.

சங்ககாலக் கடவுட் பாடல்கள்

[பண்டித வித்துவான், த வடிவேலு; யாழ்ப்பாணம்]

என்றும் ஒருநிலைத்தாய் ஒப்பற்ற தனிப்பிழம்பாய் நின்று நிலவும் ஒருவனையே, அவனால் படைக்கப்பட்ட மக்கள் பல பெயர் சொல்லி வழிபடலாயினர். மக்களினத்தில் மதிநலம் படைத்த அறிஞர்கள் - புலவர்கள் கடவுள்மாட்டு மக்களுக்கு நம்பிக்கையை உண்டாக்கி நல்நெறியடைவிக்கும் பேரருள் கொண்டு கடவுளின் உயரிய இயல்புகளை அமைத்துப் பாக்களாகத் தந்துள்ளனர். கி. பி. 6-ம் நூற்றாண்டின் பின்னால் வாழ்ந்த தமிழ்ப் பெருவள்ளல்கள் கடவுட்பாடல்களையே முழுவதும் யாத்தனரெனினும் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன்பு வாழ்ந்த தமிழறிஞர்கள் பெரிதும் மக்கள் வாழ்க்கையையே குறித்துப் பாடலாயினர். அவற்றுள்ளும் கடவுளைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படினும் அன்றும் கடவுளைக்குறித்துப் பாடிய கடவுட்பாடல்களும் சில நமக்குக்கிடைக்கும் பேறு பெற்றுள்ளோம்.

சங்ககாலத்துப் பல பாடல்களும், உரைநடைகளும் கடல்கோளாலும் வேறு இயற்கை ஏதுக்களாலும் அழிந்தொழிந்தன எனவும், எஞ்சியுள்ளவையெல்லாம் சங்ககால இறுதியிலெழுந்தனவே எனவும் அறுதியிடலாயினர். அவ்வாறானால் அக்காலை கடவுளைப் பாடிய பாடல்கள் எத்துணையிருந்தனவோ என்பதை நம்மனோர் அறுதியிடலரிதாகும். இன்றுள்ள எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் பத்துப்பாட்டின் முதற்பாடலாக அமைந்துள்ள திருமுருகாற்றுப்படையும், பரிபாடலில் பதினான்கு பாடல்களும் கடவுளையே பாடுவனவாகக் காட்சி யளிக்கின்றன. அவற்றின் மாட்சி மதிப்பிடற்கு அடங்காதனவாம்.

சங்கப் பாடல்கள் பலவற்றிலும் 'நீலமணி மிடற்றொருவன் போல' 'அரும்பெறல் ஆதிரையன்' என்றிவ்வாறு போற்றப்படினும் சிவனுக்கென யாக்கப்பட்ட பாட்டுக்களுள் ஒன்றேனும் நமக்குக் கிடைத்திலது. ஈண்டு திருமால், முருகன் ஆகியோரைப் பாடும் சங்கப் பாடல்களே நாம் காணக்கிடைப்பவாயின.

முருகன் பாடல்கள் : திருமுருகாற்றுப்படை; இது வீடு பெற எழுந்த பாடல், வினையில் மாண்டு குகையில் அடைப்புண்டு பூதத்தினால் புடைத்துண்ணுவான் கிடந்த தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரையும் இன்ப நல்வழியெய்துவித்த பெருமைபெற்ற பாடலாகவும் போற்றப்படுவதாயிற்று. எவ்வாறாயினும் நக்கீரன் வீடுபேறு கருதி முருகனைப் போற்றிய தமிழ்ப் பனுவலாக விளங்கக் காண்கின்றோம். * முருகன் எவ்விடத்திலாவது பிறவாயாக்கைப் பெரியோனாகப் போற்றப்பட்டிலன். இறைவனருளால் அறுவர் பயந்த உயர்வுடைப் பாலகனாகவே காட்சியளிக்கின்றான். அவன் திருவிளையாடல்களெல்லாம் அருள் விளையாடல்களாகவே விளங்குகின்றன வீடு நல்கிய பெருவிளையாடலைக்கூறி வீடுபெறவிழையும் நன்மக்களனைவரையும் அவனிடம் வழிகூறி விடுக்கின்றார். ஆற்றுப் படுத்துகின்றார் நக்கீரர் திருவிளையாடல் புரியுஞ் சிறுவனை ஓரிடத்தில் காண்டல் இயலாத காரியமாகின்றது. அவன் திருவிளையாடல்கள் ஆறுபடைவீடுகளிலும் நிகழ்கின்றன. ஏன் உலகமெங்குமே அவன் திருவிளையாடல்களே நிகழ்கின்றன. எனினும் 'சேயோன்மேய மைவரையுலகம்' எனத் தொல்காப்பியர் கூறியாங்கு முருகன் மலைவாழ்நருடனேயே விளையாடல் புரிகின்றான். அங்குதான் அவனது சிறப்பியல்புகள் வெளிப்பட்டுக் காட்சியளிக்கின்றன. அவன் தனக்குகந்த இடங்களாக ஆறு இடங்களைத் தெரிந்துகொண்டான். அந்த ஆறு இடங்களிலும் அவனைக்காணலாம் எனக் காட்டுகின்றார் நக்கீரர்.

போரில் வெற்றிபெற்று உயரக்கட்டிய கொடியுடன் பந்தும் பாவையும் விளங்குகின்ற போர்த்தொழி லரிதாகிய வாயிலினையும், அங்காடித் தெருவினையும், மாடங்கள்மிக்க பல தெருக்களையும் உடையதாக மதுரைமாநகரம் காட்சியளிக்கின்றது. அதன் மேற்றிசையிலே அழகிய வண்டின் திரள் இராக்காலத்தே தாமரைப்பூவில் துயில்கொண்டு காலையிலே சுனைப்பூக்களில் சென்று ஆரவாரிக்கின்றன. மூங்கில்கள்

---

* இக்கருத்து திருமுருகாற்றுப்படை நச்சினார்க்கினியர் உரைக் குறிப்பையும் பரிபாடல் உரைக்குறிப்பையும் அடியொற்றி யமைந்தது. கந்தபுராணம் வேறு கூறும்.

நிறைந்த மலையிலே காலில் சதங்கையணிந்து வளைந்து நுடங்கின இடையையும், பெருமையுடைய தோளினையும் உடைய அழகிய மகளிர் பூந்தொழிலமைத்த செவ்வாடையுடுத்துக் காட்சியளிக்கின்றார்கள். அவர்கள் சாம்பூனதம் என்னும் பொன்னாலியன்ற பூணினையும், தலைக்கோலத்தையும் அணிந்துள்ளனர். கொண்டையிலே சண்பக மலரைச் செருகியுள்ளனர். அரும்புகளால் தொடுத்த மாலையைக் கொண்டையில் வளையவைத்துள்ளனர். சந்தனச் சாந்தினைத் தமது மார்பகத்து அப்பி எஞ்சிய சாந்து கொண்டு ஒருவர்மீதொருவர் தெளித்துக் 'கோழி மேலாய்நின்ற கொடி நெடுங்காலம் வாழ்வதாக' என்று வாழ்த்தி ஆரவாரத்துடன் பாடியாடுஞ் சோலை எனத் திருப்பரங்குன்றச் சிறப்பினை எடுத்தோதியவர் அங்கு செங்காந்தள் மலரைச் சூடிய முடியையுடையனாய், அவுணர்வலிகெட மாவை அடியுடன் அழித்த வெற்றியையுடைய வேலையுடையனாய் உலகத்துயிர்கள் உவப்பத் தன்னையடைந்தோரது தீவினையைப்போக்கி அறியாமையை அகற்றும் தாளினையும், பகைவரை யழித்த பெருமையுடைய கையினையுமுடையனாய் செங்கடம்ப மாலையணிந்து, இந்திரன் மகள் தெய்வயானையை மணந்தசெம்மல் ஞாயிற்றைக் கடலில் கண்டாங்கு —ஒளியினையுடையனாய் விளங்கக்காண்பாய் என அடையாளங் கூறி விடுக்கின்றார். தன்னைச் சேர்ந்தவர்களின் தீவினையைப் போக்கி அவர்கள் அறியாமையை நீக்கும் முருகனது அடியின் பெருமையை விளங்கவைத்த திறம் வியத்தற்குரியதாகும். அன்றியுந் திருப்பரங்குன்றம் செல்வம் மல்கிய பெருந்தகையோர் வாழுமிட மென்பதையும் அங்குள்ள சோலை மகளிராடலாற் சிறந்து விளங்கியதென்பதையும் எக்காலத்துள்ளோரும் அறியுமாறு கூறிச் செல்வாராயினர்.

முருகன் விளங்கும் திருப்பரங்குன்றத்தைச் சுட்டிக்காட்டியவர் அவனுறையும் மறு இடத்திற்கும் இட்டுச் செல்கின்றார். ஆங்கு மத்தகத்தே பொன்னரிமலை பட்டத்தோடு கிடந்தசைய வலியினையுடையதாய்க் காற்றினையொத்த வேகமுடைய யானையென முருகனது ஊர்தியின் பெருமைகூறியவர் பலவகைப்பட்ட மணியினைப் பதித்தமைத்த ஐவேறு வகைப்பட்ட தொழிலமைந்த முடியினை யுடையனாய், தவத்தொழிலை முடிப்பாரது மனத்திலே பொருந்தித் தோன்றுகின்ற முகங்களாறினுக்கும் அறுதொழில் உண்டென விளக்குகின்றார். மாயையுலகம் ஒளி

பெறுமாறு பல சுடர்களையும் தோற்றுவித்தது ஒரு முகம். தன்மேல் அன்பு செய்தார்க்கு வேண்டும் பொருளை முடித்துக் கொடுத்தது ஒரு முகம். முறைமை தப்பாத யாகத்தில் தீங்கு வராது நினைத்தது ஒரு முகம். உண்மைப்பொருளை ஆராய்ந்து தவத்தோர் ஏமுறும்படி உணர்த்தித் திங்கள்போல விளங்கா நின்றது ஒரு முகம். நடுவு நிலை மாறி அசுரரைக் கெடுத்துக் களவேள்வியை விரும்பியது ஒரு முகம். குறவர் மகளாம் வள்ளியுடன் மகிழ்ச்சியை அனுபவித்தது ஒரு முகம் என ஆறுமுகங்களின் செயல்களையும் விரித்துரைக்கின்றவர் பன்னிரு கையின் தன்மையையும் விளக்கி மயிலையுடைய கொடியினை யுடையனாய்த் திருச்சீரலைவாயிலிலும் உவந்துறைவான் எனக் காட்டுகின்றனர். இங்கு பகைவரை யழித்தலும், அடைந்தோரை யாக்கலும், உலகு புரத்தலுமாகிய முருகன் பெருமை விளக்கப்பட்டுள்ளது.

மீண்டும் முருகனுறையு மிடங்காட்டிச் செல்பவர் ஆவினன்குடியைக் காட்டி யாண்டு மரவுரியுடுத்தோரும், நரைமுடியினை யுடையோரும், அழுக்கற்ற வடிவினையுடையோரும், விரதங்காத்த பட்டினியால் தசை கெட்டு மார்பெலும்புகள் வெளித்தோன்றும் உடம்பினை யுடையோரும், பலகாலம் உணவற்றிருப்போரும், பகையுஞ் சினமும் நீங்கிய மனத்தோரும், உண்மையறிவுடையோரும், கற்றோர்க்குத் தலைமையாளராய் விளங்குவோரும், ஆசையற்ற அறிவினையுடையோரும் யாவரிடத்தும் வெறுப்பற்ற முனிவரும் முன்னே செல்ல, கந்தருவர் யாழ் வாசிக்க, கந்தருவ மகளிரும் உடன்விளங்க கருடக்கொடியை உடைய திருமாலும், ஏற்றுக்கொடியோனாகிய உருத்திரனும், இமையா முக்கண்ணுடைய செல்வனும், இந்திரனும், பிரமனும் முப்பத்துமூவரும், பதினெண் வகையாகிய உயர்நிலைபெற்றோரும் வந்து காணும்படியாகத் தெய்வயானையாருடன் வீற்றிருத்தலுமுண்டு என, முருகனை வழிபடுவோர் இன்னோர் இன்ன இயல்புடையோர் என்பதனையும், ஏனை கடவுளர்களெனப் பேசப்படுவோரனைவரும் முருகனையே வழிபடுவோராவர் என்பதனையும் விளங்க உரைப்பாராயினர். அப்பாற்சென்று திருவேரகத்தைக் காட்டியவர் ஆங்கு அந்தணர் ஆறெழுத்தோதி வழிபாடியற்றுகின்றமையைக் கூறுகின்றார். அந்தணர் இயல்பை விளக்குவதே அவர் கருத்தாகின்றது.

அப்பாற் செல்லுகையில் குன்றுதோறாடலைக் காட்டுகின்றார். அங்கு மலையில் வாழுங் குறவரின் கொலைத்தொழிலையும், மதுவுண்டு குரவையாடும் அவர்களின் களியாட்டையும் அறியஉணர்த்தியவர் அவ்விடங்களில்குரவையாடும் மகளிருடன் கோழிக்கொடியை உயர்த்தி மயிலிவர்ந்து சென்று தலைக்கை கொடுத்து ஆடுமியல்புடையவன் என முருகன் திருவிளையாட்டைக் காட்டுகின்றார். முருகன் வெறியாட்டிடங்களிளெல்லாம் காட்சியளிப்பானெனவும் கூறுகின்றவர் பண்டைக் குறமக்களின் வெறியாட்டு விழாவின் காட்சியை எக்காலத்தோருமறியுமாறு சந்தி, சதுக்கம், அம்பலம் ஆகிய எவ்விடத்திலாயினும் தினைபரப்பிப் பூக்களைப் பெய்து, ஆட்டினைப் பலியிட்டு அழைப்பரெனவும்,அவ்விடங்களில் அவன் வெளிப்பட்டுத் தோன்றுவானெனவும் காட்டியுள்ளார்.

அவனுறையுமிடம் இன்னுமொன்றுளதெனக் காட்டுபவர் களமமைத்துக் கையிலே நூலால் காப்பிட்டு, வெள்ளரிசியைக் கிடாயினது குருதியில் பிசைந்து பலியிட்டுக் குறிஞ்சிப்பண்ணைப் பாடிப் பசி, பகை, பிணி நீங்குகவென வாழ்த்தும் மக்களையுடைத்தாய் அகில் சந்தனமாகிய மரங்களைத்தள்ளி, தேன் கூடுகளும், பலாவின் நறுஞ்சுளைகளும் சிதறிக்கலக்க, மலர்கள் உதிர, யானைத்தந்தங்களை உள்ளடக்கி வாழைகளை அடியுடன் சாய்த்து, தெங்கின் குலை உதிர மோதி, மிளகுக்கொடிகள் சாய பறவைகளும் விலங்குகளும் அஞ்சிக்கெட, பொடியான பொன்னைத் தெள்ளி மலையினுச்சியினின்றும் இழுமெனும் ஓசைபடக் குதிக்கும் அருவியையுடைத்தாய் பழம் முற்றின சோலையையுடைய மலையெனக் காட்டுகின்றார். ஈண்டு பழமுதிர் சோலைமலையின் செல்வம் நிரம்பிய இயற்கை வளனை விரித்துக் காட்டுவதே புலவர் பெருவிருப்பாக உள்ளது.

இவ்வாறு ஆறுபடை வீடுகளையும் இயற்கை வளங்களுடன் விளக்கிக்காட்டியவர் இவ்விடங்களில் எங்காவது ஒரு இடத்தில் அவனைக் காணலாம். கண்டாயானால் முகமலர்ச்சியுடன் வணங்கி, கையைத் தலைமேல்வைத்து வாழ்த்தி, அவன் திருவடி தலையிலுறும்படி வணங்கி, அறுவர் பயந்த செல்வ! கல்லாலின் கீழிருந்த கடவுளின் மைந்த! மலைமகள் மகனே! வானோர்

படைத்தலைவ! நூலறி புலவ! இருவர் கணவ! மலையைப் பிளந்தோய்! குறிஞ்சித் தலைவ! சூரன்மரபறுத்த வீர! எனப் புகழ்ந்து நின் திருவடியைப்பெறும் விருப்பால் வந்தடைந்தேன் என நீ கூறுவதற்குமுன்னே, முன்பு உளதாம் தனது இளைய வடிவைக்காட்டி, “நீ வீடுபெற நினைந்துவந்த வரவை யான் முன்னே அறிவேன்! அஞ்சாதே” என அன்புடைய நன்மொழி கூறிப் பிறரால் பெறுதற்கரிய பரிசிலாக வீடு பேற்றினைத் தருவன் எனக் கூறிவிடுக்கிறார். மக்களனைவரையும், முருகனது அருட்பெருந் தன்மைகளையும், அவன் விரும்பியுறையும் இடங்களின் இயற்கை வளங்களையும், பண்டைத் தமிழரின் பண்பாட்டையும் இன்னும் நாம் கண்டுகளிக்குமாறும், அவனடி அடைந்துய்யுமாறும் உயிர்கள்மாட்டுக்கொண்ட காதலுள்ளத்தால் கனியவைத்துச் செல்கின்றார் நக்கீரர்.

“ஞானசம்பந்தம்”

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,
“ஞானசம்பந்தம்” காரியாலயம்
தருமபுரம், மாயூரம் P. O.

தமிழ்சுவைக்கும் திருமடங்கள்.

ச. த.

மனமொத்த புலவர்கள் கூடியிருந்தால் மகிழ்ச்சியாம். இது ஏது இயற்கைக்கு விரோதமாக இருக்கிறதே! எல்லாவற்றிற்கும் உவமை தேடி அலைகின்ற புலவர்களுக்கு உவமை சரியானபடி கண்டுபிடித்துச் சொன்னார் நெல்லிக்காய் மூட்டை என்று ஒருவர். அப்படியிருக்க, புலவர்கள் கூடியிருக்கவாவது! அவர்கள் மகிழவாவது! என்று கேட்கலாம். எண்ணாயிரம் பேரில் ஒருவர் சொல்லிவைத்திருக்கிறார்

'தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்து
உம்பர் உறைவார் பதி'

என்று. இப்படிப்புலவர்கள் கூடிக்களிப்பதிலே சுவர்க்கானுபவம் தோன்றுகிறதாம்.

திருவாவடுதுறை யாதீனத்து மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிகர் அவர்கள் துலா காவேரி கடைமுக ஸ்நாநத்திற்கு எழுந்தருளியானார்கள். திருப்பனந்தாள் பெரிய எஜமான் ஸ்ரீ-ல-ஸ்ரீ சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மாதானத்தெருவில் இருந்த தமது மடத்தில் எழுந்தருளி யிருந்தார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிகர் அவர்களை வணங்கித் திருமடத்துக்கு எழுந்தருள வேண்டிக்கொண்டார்கள். அவ்வாறே இருந்து நெடுநேரம் உரையாடிக்கொண்டிருந்தபொழுது அம்பலவாண தேசிக மூர்த்திகள் மடக்கிய காலை மாற்றி உட்கார்ந்தார்கள். அம்பலவாண தேசிகர் அவர்களிடத்தில் எத்தனைமணி நேரமானாலும் காலை மாற்றிப் போடுவதோ அசைப்பதோ வழக்கமில்லை. இன்று மாற்றி அமைத்ததைக்கண்ட எஜமான் அவர்கள் 'அம்பலவாணர் கால்மாறியாடியதைக் கண்டுய்ந்தேன்' என்றார்கள். கேட்டு நயமுணர்ந்த அம்பலவாண தேசிகர் அவர்கள், 'இது சொக்கலிங்கத்தின் வெள்ளியம்பலமல்லவா; அதனால்தான் அப்படியாயிற்று' என்றார்கள். கல்வியைச் சுவைக்கும் உண்மை

யறிவாளிகளின் இந்த உரையாடலைக் கேட்டு அனைவரும் மிக மகிழ்ந்தார்கள்.

ஒரு முறை அம்பலவாண தேசிகர் அவர்கள் முன்னிலையில் சூரமங்கலம் வைத்தியநாத பாகவதருடைய அறுபத்து மூவர் கதாகாலக்ஷேபம் முறையாக நடந்துவந்தது. வைத்தியநாத பாகவதரைப்போல் கதை செய்பவர்கள் அன்றும் இன்றும் ஒருவருமில்லை. ஒன்றிரண்டு கதைகளை வைத்துக் கொண்டே தங்கள் வாழ்நாளை வளர்த்துக்கொள்பவர்கள் பலர். இவர்களோ ஒவ்வொரு கதையிலும் புதிய மனோபாவங்களையும் கருத்துக்களையும் காட்டுவதில் வல்லவர்.

ஒரு நாள் கண்ணப்பர் வரலாறு மிக உருக்கமாக நடந்து கொண்டிருந்தது. பாகவதர், கேட்கின்றவர்கள் எல்லோரையுமே அன்பின் சிகரத்தில் ஏற்றிவைத்துவிட்டார். அனைவரும் ஆனந்தக்கண்ணீர் சொரிய அன்புருவாகத் திகழ்ந்தனர். கதையும் முடிந்தது. ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிகர் அவர்கள் பாகவதரைப் பார்த்து புன்முறுவலுடன் 'என்ன ஐயா! ஒரேயடியாக எல்லோரையும் கண்ணப்பராக்கி விட்டீரே' என்றார்கள். பாகவதர் ஆச்சர்யத்துடன் நின்றுகொண்டிருந்தார். பக்கத்தில் நின்றுகொண்டிருந்த பொன்னோதுவா மூர்த்திகள் அவர்கள் இங்கே உத்தரவானபடி எல்லோரும் கண்–அப்பராகவே இருக்கிறார்கள் என்று விண்ணப்பித்துக் கொண்டார்கள். மகா சந்நிதானமவர்கள் இது பொன்னுரைதான் என்று கூறி மகிழ்ந்தார்கள்.

குறிப்பு :- அம்பலவாணராகிய நடராசப்பெருமான் வலதுகாலை ஊன்றி இடது காலைத் தூக்கி ஆடுவர் ஆதலால் அம்பலவாண தேசிகர் கால் மாற்றியிட்டதை இங்ஙனம் விநயமாகத் தெரிவித்துக்கொண்டார்கள். அவர்களும் மதுரையில் வெள்ளியம்பலத்திலே சொக்கலிங்கந்தான் மாறியாடியது என்று குறிப்பாலுணர்த்தி இங்ஙனம் மறுமொழி யளித்தார்கள்.

2. கண் — அப்பர். கண்களில் நீரையுடையவர்கள். அப்பு — நீர்.

செய்திகள்

தருமபுர ஆதீனத்தில்
ஸ்ரீலக்ஷ்மிதுர்க்காதேவிக்கு மண்டலாபிஷேகம்

தருமபுரம் ஸ்ரீ தருமபுரீசுவரசுவாமி ஆலயத்தில் நூதனமாகப் பிரதிஷ்டைசெய்யப்பெற்றுள்ள அஷ்டாதசபுஜ ஸ்ரீ மகாலக்ஷ்மிதுர்க்காதேவிக்கு 11—3—53 அன்று மண்டலாபிஷேகம் நடைபெற்றது. அதைமுன்னிட்டு அன்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் ஆக்ஞையின்வண்ணம் ஏகதின லக்ஷார்ச்சனையும் நடைபெற்றது. காலையிலிருந்து அருச்சனைதொடங்கி நடந்தது. இரவு அருச்சனை முடிந்ததும் தேவி வெள்ளிக்கவசமணிந்து கம்பீரமாக – சாந்தத்துடன் காட்சிவழங்கினாள். அன்பர்கள் கூட்டம் கூட்டமாக ஆராதனைப்பொருள்களுடன் வந்து வழிபாடாற்றிச் சென்றார்கள்.

30—3—53 திங்கட்கிழமையன்றும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் ஜன்மநக்ஷத்திரத் தினத்தை முன்னிட்டு ஏகதின லக்ஷார்ச்சனை நடைபெற்றது.

தருமபுரத்தில்
ஆண்டு விழா – திருவள்ளுவர் விழா

தருமபுர ஆதீனம் பல்கலைக்கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகத்தின் 3-வது ஆண்டு விழா மேற்படி கல்லூரிக்கட்டிடம் ஸ்ரீ அருணந்தி நிலையத்தில் 11—3—53 மாலை சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. ஆதீன இலவச இசைவகுப்பு மாணவர்கள் கடவுள்வாழ்த்துப் பாடினார். கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகரவர்கள் வரவேற்புரை கூற, மாயூரம் ஸப்ஜட்ஜ் திருவாளர் ஸ்ரீராம் M.A., B.L., அவர்கள் தலைமையேற்றார்கள். தலைவர் ஆணைப்படி கழக அமைச்சர் R. சண்முகம் ஆண்டறிக்கை வாசித்தார். தலைவர் முன்னுரைக்குப்பின் கரந்தைப் புலவர்கல்லூரித் தலைவர் வித்துவான், திருவாளர். உ. பழநி M.A., அவர்கள் வள்ளுவர் விழாவிற்கு ஏற்ப "திருவள்ளுவர் காட்டும் வாழ்க்கை" என்ற தலைப்பில் மாணவர்கள் அறிந்துகொள்ளவேண்டிய பல கருத்துக்களை அழகாக

எடுத்துக்காட்டினார்கள். ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர் புலவர், திரு. **முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்** அவர்கள் ''தொல்காப்பிய உரையாசிரியர்கள்'' என்ற பொருள்பற்றிய இலக்கணப்பேச்சை மிக அழகாகச் சுவைபடப் பேசினார்கள். ஸ்ரீ காசிமடத்திலிருந்தும், பல பேரறிஞர்களிடமிருந்தும் வந்திருந்த வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பெற்றன.

பிறகு, தலைவரவர்கள் ''திருக்குறள் நம்நாட்டு நீதிநூல். மாணவர்கள் அந்த நீதிகளை உலகெங்கும் பரவச்செய்யவேண்டும். அப்படிச்செய்தால் மக்களுக்குள் பகைமை தோன்றாது. எல்லாரும் சமாதானமாக இருப்பார்கள். இந்த இடத்தில் வந்தவுடன் என்மனம் அமைதியாகிறது. இதனுடைய அமைப்பும், அழகும் போப் அவர்கள் ஆண்டவர் வசிக்கும் இடத்தை நமக்கு நினைக்கச்செய்கிறது.'' என்றெல்லாம் பல அருமையான கருத்துக்களை முடிவுரையாக மொழிந்தார்கள். கல்லூரித் தலைவர் பிர்மஸ்ரீ ய. மகாலிங்கசாஸ்திரி அவர்கள் நன்றிகூறக் கடவுள்வாழ்த்துடன் விழா இனிது முடிந்தது. அனைவருக்கும் சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்றது.

தலைஞாயறு தேவஸ்தானத்தில்

அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம்

தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த தேவாலயங்களுள் தலைஞாயறு என வழங்கும் திருக்கருப்பறியலூர் ஸ்ரீ குற்றம்பொறுத்த நாதர் ஆலயமும் ஒன்று. சீகாழியைப்போல் கட்டுமலையில் தோணியப்பரும், சட்டைநாதரும் எழுந்தருளியிருப்பதாலும்; காழிக்கு மேற்கே தலம் விளங்குவதாலும் மேலைக்காழி எனவும் பெயர்பெறும். ஞாயிறு (சூரியன்) பூசித்து வழிபட்டதால் தலைஞாயிறு எனப்பட்டது. இத்தகைய சிறந்த ஆலயத்தில் கட்டுமலை அஸ்திவாரத்திலிருந்தே பிரித்தெடுத்துப் புதிதாக அமைக்கப்பெற்றது. சுதைவிக்கிரகங்களும் புதிதாகவே அமைக்கப்பெற்றுள்ளன. மற்றும் திருமதில், பிராகாரத் தளவரிசை முதலியன பழுதுபார்த்தும் புதுப்பித்தும் திருப்பணிசெய்யப் பெற்றது.

22—3—53 ஞாயிற்றுக்கிழமை காலை 7-மணிக்கு அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

யாகசாலை 20—3—53 முதல் தொடங்கி ஒவ்வொரு காலமும் பூர்ணாகுதி தீபாராதனை நடைபெற்றது. ஆதீனப் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் திருமுறைப் பாராயணமும், வேத பாராயணமும் நிகழ்த்தினார்கள். கும்பாபிஷேகத்தன்று மாலை ஆதீனப் பிரசாரகோஷ்டியார் சமயப்பிரசங்கஞ் செய்தார்கள். இரவு மகாபிஷேகமும் நடந்தது. சிறந்த மேளவாத்தியங்களுடன் பஞ்சமூர்த்தி திருவீதியுலாக் காட்சியும் சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான அன்பர்கள் கூடித் தரிசித்து இன்புற்றார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் கும்பாபிஷேக தரிசனத்திற்கு எழுந்தருளினார்கள்.

கும்பாபிஷேகம் மிகச்சிறப்புற நடைபெறவேண்டும் என்று உள்ளூர்ப் பெருமக்களும் கோயில்காரியங்களில் கலந்துகொண்டு பணிகள் செய்ததும், பெருமக்களின் சார்பில் வாரவழிபாட்டுக் கழகம் ஒன்று அமைத்துக் கொண்டதும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களால் பாராட்டத்தக்கதாக இருந்தது.

தருமபுர ஆதீன தேவஸ்தானங்களில்
பங்குனி உத்திரத் திருவிழா

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான வைத்தீஸ்வரன் கோயில், திருபுவனம், பேரளம் ஆகிய தேவஸ்தானங்களில் பங்குனி உத்திரத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஆங்காங்கும் ஆதீன வித்துவான்களைக்கொண்டும், புலவர் பெருமக்களைக்கொண்டும் சமயச் சொற்பொழிவுகள் செய்விக்கப் பெற்றது. ஆதீனப்பிரசாரகோஷ்டியார்களும் மேற்படி தேவஸ்தானங்களுக்குச் சென்று பிரசாரம் செய்தார்கள். தேவஸ்தானத் தேவாரவகுப்பு ஆசிரியர்களும், மாணவ மாணவிகளும் தேவாரப்பாடல்களை இசையுடன் ஓதி, தெய்வ உணர்ச்சியை உண்டாக்கினார்கள்.

பிரசாரங்களை நல்லமுறையில் அன்பர்கள் அனைவரும் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானமவர்கள் ஆங்காங்கும் ஒலிபெருக்கி அமைத்திருப்பதை அன்பர்கள் பாராட்டினர். பேரளம் தேவஸ்தானத்தில் உள்ளூர் அன்பர்களும், சிறப்பாகக் கடைத்தெருவிலுள்ள வாணிபப் பெருமக்களும் ஆறாந்திருநாள், ஏழாந்திருநாள் இவைகளில்

பங்கெடுத்துக்கொண்டு செய்வித்த சந்தனக்காப்பு அலங்கார வழிபாடுகள், திருக்கல்யாணமகோற்சவம் முதலியன அன்பர்கள் அனைவரும் பாராட்டத்தக்க சிவபுண்ணியச் செயலாக விளங்கின. ஆதீனப் பிரசாரத்திற்குப்பிறகு இன்னிசை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுசெய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பங்குனி உத்திர விழாவில் சொற்பொழிவுகள்

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான **வேளூர் தேவஸ்தானத்தில்** 24—3—53 ல் தருமபுர ஆதீன வித்துவான், பாலகவி திரு. வே. இராமநாதன் செட்டியார் "நம்பியாரூரர்" என்பது பற்றியும், 25—3—53 ல் தருமபுர ஆதீனக் கல்லூரித் துணைத் தலைவர் வித்வான் திரு. ச. தண்டபாணிதேசிகர் "சாதனங்கள்" என்பதுபற்றியும், **திருபுவனம் தேவஸ்தானத்தில்** 21--3—53 ல் சென்னை, தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர் வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை "திருவாசகம்" என்பதுபற்றியும், 25—3—53 ல் திரு. இராமநாதன் செட்டியார் "மணிவாசகர்" என்பதுபற்றியும், **பேரளம் தேவஸ்தானத்தில்** 21—3—53 ல் திருவையாறு, தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர் திரு. இராம. கோவிந்தசாமிபிள்ளை "முருகன் அருள்பெரு நெறி" என்பது பற்றியும், 22—3—53 ல் திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை "திருத்தாண்டகம்" என்பதுபற்றியும், 24—3—53ல் குத்தாலம் போர்டு ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் "சமயங்காத்த அரசர்" என்பது பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

தருமபுர ஆதீனப் பிரசாரம்

பங்குனி உத்திரத் திருவிழாவை முன்னிட்டு தருமபுர ஆதீனப் பிரசாரகோஷ்டியார் சீகாழி தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்வான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளவர்கள் தலைமையில் வேளூர், திருபுவனம், பேரளம், ஆகிய இடங்கட்குச் சென்று பிரசாரம் செய்தார்கள். 22—3—53 ல் தலைஞாயிறு என்னும் திருக்கருப்பறியலூரில் நடைபெற்ற கும்பாபிஷேகத்திற்கும் சென்று, அன்றுமாலை மேற்படி கோயிலில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். அதன் விபரம் வருமாறு :—

வேளூர் தேவஸ்தானத்தில் 20—3—53ல் கார்த்திகையன்று தருமபுர ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர்கள் புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் "குமரன்", வித்துவான், திரு. M. ஆறுமுக தேசிகர் "முருகனும் தமிழும்", வித்துவான், திரு. V. S. குருசாமி தேசிகர் "சிறுகுறும்பு". 21—3—53ல் திரு. M. ஆறுமுக தேசிகர் "கந்தர் அலங்காரம்", திரு. V. S. குருசாமி தேசிகர் "சங்க இலக்கியத்தில் கண்ட கடவுள்".

திருக்கருப்பறியலூர் தேவஸ்தானத்தில் 22—3—53ல் ஷை ஆலயத்தில் நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டுப் பிரசாரம் நடைபெற்றது. வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர், புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் ஆகியோர் பேசினார்கள்.

திருபுவனம் தேவஸ்தானத்தில் 23—3—53ல் திரு. M. ஆறுமுக தேசிகர் "உடம்பின் பயன்", திரு. V. S. குருசாமி தேசிகர் "சமயவாழ்க்கை". 24—3—53ல் திரு. ச. தண்டபாணி தேசிகர் "வாழ்வின்பயன்",

பேரளம் தேவஸ்தானத்தில் 25—3—53ல் திரு. M. ஆறுமுக தேசிகர் "நாமமந்திரம்", திரு. V. S குருசாமி தேசிகர் "அகக் கோயில்". 26—3—53ல் M. ஆறுமுக தேசிகர் "திருவுள்ளம்", பேரளம் தமிழாசிரியர் புலவர் திரு விசுவநாதன் "தலையான மனிதர்", திரு. ச. தண்டபாணி தேசிகர் "நாம் அறிய வேண்டுவன"

பிரசாரகோஷ்டித் தலைவர் ஸ்ரீமத் சுவாமிகள் அவர்கள் ஒவ்வொருவர் பேச்சிலும் காணப்படுகின்ற கருத்துக்களை யெல்லாம் தமது தலைமையுரையில் நன்கு எடுத்து விளக்கிப் பேசினார்கள்.

மதிப்புரைகள்

1. திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ் :-

பதிப்பாசிரியர் சித்தாந்த சைவமணி திரு. த. ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள். திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ குரு மகா சந்நிதானம் அவர்கள் தமிழுலகிற்கு உபகரித்து வரும் தமிழ்நூல் வெளியீட்டு வரிசைகளில் இதுவும் ஒன்று. அவ்வாதீனத்தில் 20-வது பட்டத்தில் மகா சந்நிதானமாக விளங்கிய ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சிவபரிபூரணம் எய்திய குருபூஜை நன்னாள் நினைவுமலராக வெளிவந்துள்ளது. அவ்வாதீனத்து எட்டாவது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகளால் அருளிச் செய்யப் பெற்ற இப்பிள்ளைத்தமிழ் சொற்சுவையும், பொருட்சுவையும் ஒருங்கு பெற்றுத் திகழ்கிறது. இந்நூல் வெளியீட்டுப்பணியில் பதிப்பாசிரியர் எடுத்துக்கொண்ட அருமுயற்சி முகவுரையில் படித்து அறியத்தக்கது. மேலும் அவர்களால் எழுதப்பெற்ற குறிப்புரை நூலின் அருமையை அறிவதற்குப் பெருந்துணையாக நிற்பதோடு அவர்களது பேரறிவின் நுட்பத்தையும் அறிவிக்கின்றது. இத்தகைய அருந்தமிழ் நூலைப்பெற விரும்புவோர் அவ்வாதீன **நூல்நிலயக் காப்பாளருக்கு** 0—8—0 தபாற்றலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

2. முதுமொழிமேல் வைப்பு :-

முதுமொழியாகிய குறட்பாக்களைப் பாடலின் பிற்பகுதியாகக்கொண்டு யாக்கப்பெற்ற நூல்வரிசையில் இது ஒன்று. முதல் 186 பாடல்கள் முதுமொழி வெண்பாக்களாக அமைந்திருக்க, அதற்கு மேலுள்ள பத்துப் பாடல்கள் வீட்டின்பால் என்ற தலைப்புடன் சாத்திர நூலாகிய திருவருட் பயனிலுள்ள குறள் வெண்பாக்களை ஈற்றில்கொண்டு திகழ்வது இந்நூலின் தனிச்சிறப்பு. மிக அருமையான நூல். தருமபுர ஆதீனத்தில் தலைசிறந்த அடியாராக விளங்கிய ஸ்ரீ வெள்ளியம்பலவாண சுவாமிகளால் செய்யப்பெற்ற இந்நூல், அவர்களது வித்தியா குருவும் தருமபுர ஆதீன அடியவரும் ஆகிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பரம்பரையில் இப்பொழுது ஸ்ரீ காசிமடத்துத் தலைவராக வீற்றிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஆணைப்படி வெளிவருவது

மகிழ்ச்சிக்குரியது. டாக்டர். ஐயர் அவர்களின் குமாரர் பிர்மஸ்ரீ S. கல்யாண சுந்தரையர் அவர்கள் அருமையான ஆராய்ச்சி முகவுரையும், குறிப்புரையும் எழுதியுள்ளார்கள். இப்பொழுது 3-ம் பதிப்பாக வெளிவந்துள்ளது இந்நூலின் அருமைக்கு எடுத்துக் காட்டாகும். முன் பதிப்புகளைப்போலவே ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகளின் நினைவு மலராகவே இப்பதிப்பும் வெளிவரத் திருவுளம் பற்றிய பெருவாய்ப் பிணை அறிஞர்கள் நினைந்து நினைந்து இன்புறுவார்களாக. இது ஸ்ரீ காசிமடத்து வெளியீடு. ஷை மடத்து இளவரசு ஸ்ரீமத் வித்துவான் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பதிப்புரை நூன்முகமாக இருப்பது இப்பதிப்பின் தனிச் சிறப்பாகும். வேண்டுவோர், **ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடம்; ஸ்ரீ வைகுண்டம்'** என்ற முகவரிக்கு *0—7—0* தபாற்றலை அனுப்பிப் பெறுக.

3. ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க்கல்லூரி அறிக்கை :-

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற இத்தமிழ்க் கல்லூரியின் 9-வது ஆண்டு நிகழ்ச்சி விபரம் இதில் தரப்பெற்றுள்ளது. ஆண்டுதோறும் மாணவர்களின் தேர்ச்சி முறை நன்முறையில் அமைந்திருப்பது கல்லூரித் தலைவரின் நன்முயற்சியேயாகும். மேலும் ஸ்ரீ காசிமடத்தின் அதிபரால் ஏற்படுத்தப்பெற்ற ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் நினைவுப்பரிசை (ரூபாய் ஆயிரம்) 1952-ல் தேர்வு எழுதிய அக்கல்லூரி மாணவர் P. M. இராஜகோபாலன் பெற்றிருப்பது அம்முயற்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். பாடத்திட்டம் ஆசிரியர்களின் சம்பளம், வரவு செலவு கணக்கு, இசைத்தமிழ் வகுப்பு நடவடிக்கை, ஸ்ரீ கந்தவேள் கழகப்பணிகள், பரிசுகளின் விபரம், விழாக்கள், மாணவர்கட்கு உதவிகள், வாழ்த்துப் பாடல்கள், பனசைப் புலவர்கள், பேரறக் கட்டளைகள் என்றதலைப்பில் இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளன. பொதுவாக நிர்வாக அறிக்கையோடு மட்டுமல்லாமல் ஸ்ரீ காசிமடத்துப் பணிகள் அனைத்தும் ஒருவாறு சுருக்கித் தரப்பட்டுள்ளன. 'ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது ஊதியமில்லை உயிர்க்கு' என்ற முதுமொழிக்கு ஏற்ப ஒல்லும்வாயெல்லாம் அறவினைகளை ஓவாது செய்துவருகின்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் புகழ் நீடு நிலவுவதாக.

4. தில்லைச் சிற்றம்பலப் பெருங்கோயிலின் பழமையும் திருச்சித்திரகூட அமைப்பும்:-

வெளியிட்டோர் தில்லைத் திருமுறைக் கழகத்தார். எண் 2. விலை 0—4—0. தில்லைக்கோயில் மிகமிகப் பழமையானது, இடைப்பட்ட காலத்தில் எழுந்தது திருச்சித்திரகூடம். ஆலயப் பொறுப்பு தில்லைவாழந்தணர்க்கே உரியது. அவ்வாறுக வழக்கத்தில் இல்லாத ஒன்றை உள்ளதுபோல்வைத்து வைணவர்கள் விழாக்கொண்டாட முற்படுவது அசம்பாவிதமாகும் என்ற கருத்துக்களை எளிய இனிய தமிழில் ஆராய்ச்சி நூலாகக் கல்வெட்டு ஆதாரங்களுடன் வெளியிட்ட பெருமை அறிஞர்களால் போற்றுதற்குரியது. ஆக்கியோர் சித்தாந்தப் பேராசிரியர் திரு. சபா. சிவப்பிரகாசம்பிள்ளை அவர்கள். ஷை கழகத்தலைவர் சிவநேயச் செல்வர் திரு ஆ. சு. கணபதிப்பிள்ளை அவர்கள் கழகத்தின் சார்பாகச் செய்துவரும் பணிகளுள் இதுவும் ஒன்று என்பதை உலகம் அறிந்து மகிழுமாக. வேண்டுவோர் ‘ தில்லைத் திருமுறைக்கழகம், தேரடிக் கடைத்தெரு, சிதம்பரம்’ என்ற விலாசத்திற்கு ஐந்தணா தபாற்றலை அனுப்பிப் பெறலாம்.

5. திருக்கேதார யாத்திரை:

தலயாத்திரை செய்த சமயாசாரியர்களாகிய திருஞான சம்பந்தப்பெருமான் திருக்காளத்தியிலிருந்தே பாடினதாகப் பெரியபுராணம் சொல்லுகிறது. ஹரித்துவாரிலிருந்து திருக்கேதாரம் 143¼ கல்தொலைவிலுள்ளது. அதிலும் 92 கல்தான் பஸ் மூலம் செல்லலாம்; ஏனைய வழிமுழுதும் நடந்தேதான் போகவேண்டுமாம், தலம் கைலாயபர்வதத்தின் ஒருபகுதி. கடல் மட்டத்துக்கு 11750 அடி உயரத்திலுள்ளது. இத்தகைய இடத்திற்கு இன்றைய குமரகுருபராக விளங்குகின்ற ஸ்ரீ காசி மடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் காசியிலிருந்து 6—5—52ல் புறப்பட்டுச்சென்று கேதாரதரிசனம் செய்து வந்தார்கள். அடிகளாருடன் உடன் செல்லும் பாக்கியம் காசியில் ஸ்ரீ காசிமடம் ஏஜண்ட் திரு. வி' கல்யாணசுந்தரம் அவர்கட்குக் கிடைத்தது. அவர்கள் அடிகளாருடன் தாம் சென்றுவந்த யாத்திரானுபவத்தை எளிய இனிய செந்தமிழ் நடையில் இதில் எழுதியுள்ளார். கோதார வழிகாட்டி என்று இந்நூலைச் சொல்லிவிடலாம், அவ்வளவு விபரம் இதில் இருக்கிறது. வழிகாட்டி வழிச்செல்பவர்க்குச் சிரமம் தோன்று

வண்ணம் பேச்சாலும், உபசாரத்தாலும் மயக்கி அழைத்துச் செல்வான், அதுபோல இந்த வழிகாட்டியும் புத்தகத்தை மூடிக் கீழே வைக்கும்வரையில் படிப்பதில் சிரமந்தோன்றாவண்ணம் அழைத்துச்செல்கிறது இந்நடையழகு. யாத்திரை புதிய அனுபவத்தோடு பழைய இலக்கியக் கருத்துக்களையும் அவர்கள் அறிவின் ஆழத்திற்கும் படிப்பின் எல்லைக்கும் இணைத்து நோக்கச் சந்தர்ப்பம் அளித்துக் கருத்தை உருவாக்குகிறது. அப்படியே இந்த எழுத்தாளர் எண்ணங்களும் புதுமையும் பழமையும் இணைந்து படிப்பவர்க்கு இனிமையை மிகஅளிக்கின்றது. சுருங்கக் கூறின் இது எந்த வகையிலும் சிறந்த நடையழகும், மொழியழகும் வாய்ந்த யாத்திரை நூல் என்னலாம். வேண்டுவோர் *1-4-0* அனுப்பிப்பெறலாம். தபாற்கூலி தனி கிடைக்குமிடம். 1. கேதாரநிலையம் கேதாரகட்டம் காசி. 2. சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் சென்னை.

6. சித்திரத் திருப்பாவை :-

இலக்கியமெல்லாமே கண்ணின் வழியாகக் கருத்தை வளர்த்துக் கதியைக் கொடுப்பனவே. ஆயினும் கவிதை கருத்துக்கு விருந்தாவதைப்போல் கண்ணுக்கு விருந்தாவதில்லை. கவிதையை ஒருவன் உள்ளவாறு உணர கவிதை நடையும் பொருள் உணர்ச்சியும் ஊன்றி உணரும் திறமும் மிக இன்றியமையாதன. இவை எல்லார்க்கும் அமைவது இயல்பன்று. ஆதலால் கவிதை கண்ணைக்கவரும் ஓவியமாகிவிட்டால் பொருள் எவ்வளவு சுலபம், இதற்கான முதல் முயற்சி இந்த வெளியீடு. சித்திரங்கள் சித்திரலேகாவினுடைய வழக்கமான பாணியில் அமைந்திருப்பது மிக மிகப் பாராட்டத்தக்கது. பி. ஸ்ரீ. ஆச்சார்யா அவர்கள் பதவுரையும், விளக்கமும், உள்ளுறையும், நயமும் ஒவ்வொரு பாடலுக்கும் தந்துள்ளார்கள். எத்தகைய கஷ்டதரமான இலக்கியங்களையும் எளிய இனிய நடையில் இன்பமூட்டி எல்லாரையும் அனுபவிக்கச் செய்வது இவர்கள் எழுத்தின்வன்மை. அந்தநிலை இதில் மிகவும் பிரதிபலிக்கிறது. உப்பமைந்த உண்கறியென இந்த வெளியீடு எல்லாவகையிலும் ஏற்றமுடையது. இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல் என்றபடி இவ்வெளியீட்டு விஷயத்தில் பி. ஸ்ரீ அவர்களைப் பயன்படுத்திக்கொண்ட நிர்வாகிகள் திறம் மிக மெச்சத்தக்கது, இது திருமலை திருப்பதி தேவஸ்தான வெளியீடு.

கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(விஜய-௵ சித்திரை-மீ 1-உ முதல் 31-உ முடிய)

(13—4—53 முதல் 13—5—53 முடிய)

1. **மேஷம்,** அசுவதி, பரணி, கார்த்திகை ¼

அசுவதியும் பரணி முதல்பாதமும் இவ்வருஷாரம்பம் முதல் இம்மாதம் 15உ முடிய சந்தோஷத்தையும் லாபகரத்தையும் தொழில் மேன்மையையும் பெரியோர் ஆசியையும் தரும். பரணி 2, 3, 4, பாதங்களும் வீண் அலைச்சலையும் அகால போஜனத்தையும், தூரப்பிரயாணத்தில் ஆபத்தையும் பலவிதகஷ்டங்களையும் தரும். கார்த்திகை முதல்பாதம் மிசிரமாய் நடக்கும். மத்தியில் சுபங்கள் உண்டாகும். புதன் சுபவாரமாகும்.

2. **விருஷபம்,** கார்த்திகை, ¾ ரோஹிணி மிருகசீரிஷம். ½

கார்த்திகை, ரோஹிணி நக்ஷத்திர பலன் பூரா சுபத்தைத் தராது வியாதி பீடையும், வீண் அலைச்சலையும் தொழில் குறைவையும் இனவருத்தத்தையும் உண்டுபண்ணும். மிருகசீரிஷம் முற்பாதி சுபமாகவும் பிற்பாதி சிரமங்களையும் தரும். தெய்வ பலம் குறையும். மனமாறுதல் ஏற்படும். எதிலும் ஸ்திரபுத்தி இல்லாமல் மாட்டிக்கொண்டு தவிக்கச்செய்யும். வியாழனும், சனியும் அசுபமாயும் ஞாயிறு சுபமாகவும் இருக்கும்.

3. **மிதுனம்,** மிருகசீரிஷம், ½ திருவாதிரை, புனர்பூசம். ¾

மிருகசீரிஷம் பின்பாதியும். புனர்பூசம் முக்காலும் சுப பலனையும், சந்தோஷத்தையும் விவாஹாதி மங்கள காரியங்களால் விசேஷச்செலவையும் நல்லோர் பெரியோர் நேசத்தையும் கீர்த்தியையும் தரும். திருவாதிரை கஷ்டத்தில் சுகத்தையும் ஜயத்தையும் நஷ்டதன பிராப்தியையும் மனதுக்குச் சாந்தியையும் பெரியோர் மேலோர் அன்பையும்தரும் புதனும் வியாழனும் சுபவாரமாகும்.

4. **கடகம்,** புனர்பூசம், ¼ பூசம், ஆயில்யம்.

புனர்பூசம் ¼ ஆயில்யம் இருநக்ஷத்திரபலனும் சந்தோஷத்தையும் சத்துரு மைத்திரத்தையும், அபவாத நிவாரணத்தையும் பந்தத்திலிருந்து விடுபடுதலையும், தெய்வசக்தி தோன்றுதலையும், வியவஹார வெற்றியையும, தொழில் விருத்தியையும் தரும். பூசநக்ஷத்திர பலன் வீண் அலச்சல், களத்திரபுத்திர வியாதியால் ஏராள செலவுகள், துஷ்டர்கள் ஸஹவாஸம், நாஸ்த்திக விருத்தி, பெரியோர் சாபம், மனம்போல் நடத்தல் இவை உண்டாகும். தேவகோபத்தால் எதிலும் அபஜயம் ஏற்படும். பொதுவில் கடகராசிக்காரர்களுக்கு வியாழன் சுபவாரமாகும்.

5. **ஸிம்மம்,** மகம், பூரம், உத்திரம். ¼

இந்த ராசிபலன் பூரா, எல்லாருக்கும் நன்மைதரும். நடுப் பகுதியில் பத்து தினங்கள் அதிக செலவும், வீண் அலைச்சலும் ஏர்ப்படும். தொழில் மேன்மை, நஷ்டமான பொருள் வரத்து.